# தமிழரசு

1-5-1997 ரூ. 3






தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் சிறந்த கலைஞர்களுக்கு **கலைமாமணி விருது** வழங்கும் விழா 15.4.1997 அன்று சென்னை - கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. மேதகு ஆளுநர் செல்வி **எம். ஃபாத்திமா பீவி** அவர்கள் விழாவிற்கு தலைமை ஏற்று விருதுகளை கலைஞர்களுக்கு வழங்கினார்.

மாண்புமிகு **முதல்வர் கலைஞர்** அவர்கள் விருதுபெற்ற கலைஞர்களுக்குப் பொற்பதக்கமும், கலைமாமணி விருது பெற்ற அகவை முதிர்ந்த நலிந்த கலைஞர்களுக்கு 'பொற்கிழியும்' சிறந்த நாடகக் குழுவிற்கு சுழற்கேடயமும் சிறந்த கலை நிறுவனத்திற்குக் கேடயமும் வழங்கினார். மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்** அவர்கள் கலைஞர்களுக்குப் பொன்னாடை அணிவித்தார்.




# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2028

சித்திரைத்திங்கள்-18

மலர் : 27 இதழ் : 21

1.5.1997

ரூ. 3/-


## உழைப்பாளர் மலர்

## இந்த இதழில்...


பாட்டாளி நலனுக்குப் பாடுபட்டால் தான்... 2

- பேரறிஞர் அண்ணா 3

முதல்வரின் மே தினச் செய்தி 4

மேதினி போற்றும் மே தின நாள்

- திரு. அ. ரகுமான்கான்

தொழிலாளர் நலம் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் 8

வியர்வை

- முதல்வர் கலைஞர் 9

தொழிலாளர் துயர் களைவோம் 14

தொழிலாளர் நலன் 18

வளமாகும் தமிழகம்

-முதல்வர் கலைஞர் 25

பாவேந்தரும் பறைவைகளும்

- சிலம்பொலி சு. செல்லப்பன் 32

நீங்களே சொல்லுங்கள்

- பாவேந்தர் பாரதிதாசன் 37

மே நாள்

- ஞா. மாணிக்கவாசகன் 42

மே தினம்

- சி. மகேந்திரன்

தமிழ்நாடு தொழிலாளர் 47

நல வாரியம் 50

தொழிலும் தொழிலாளர்களும்

- கலீல் கிப்ரான்

துறைதோறும் தொழிலாளர் 55

நலன்



# பாட்டாளி நலனுக்குப் பாடுபட்டால்தான்....

**- பேரறிஞர் அண்ணா**

நம்நாடு வெப்பமுள்ள நாடு! இவ்வளவு வெப்பத்தையும் தாங்கிக் கொண்டு வேர்வை ஆறாகப் பெருகியோட உழைப்பவர்கள் இங்கு இருக்கிறார்கள். இயற்கை வளத்தைப் பயன்படுத்தித் தொழில் திறனை உண்டாக்குபவர்கள் தொழிற்சாலையை நடத்துபவர்கள் இருக்கிறார்கள்.

திட்டமிட்டுச் செயலாற்றினால் 15 ஆண்டுகளில் ஜப்பான் நாட்டைவிடச் சிறப்பாக நம் நாடு திகழும் என்பதில் யாரும் ஐயப்பட வேண்டாம்!

இப்பொழுது எங்குப் பார்த்தாலும் ஆலைகள் எழ ஆரம்பித்துவிட்டன. தொழிலாளர்கள் இந்தச் சமுதாயத்திற்குப் புது உருவத்தைக் கொடுக்கிறார்கள்.

தொழிலாளர் உரிமைகளையும் அவர்கள் நலனையும் எவ்வளவுக்கெவ்வளவு பார்க்கின்றோமோ அவ்வளவு விரிந்த அளவில், தொழில் வளம்பெருகும். நாட்டுடைமை சேதமாகாமல் செயல் படுமானால் தொழிலைப் பெருக்கலாம். தொழிலாளர் தங்கள் வாழ்வு ஒளிவிடும் அளவு உழைக்கவேண்டும்.

முதலாளிகளுக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்வேன்.

நன்றாக ஓடிய பந்தயக் குதிரை கொஞ்சம் நொண்டினால்கூட சுட்டுவிடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்; அதுபோலத் தொழிலாளர் நலிவுடைந்தால் அவர்களை விரட்டிவிடக்கூடாது.

சுடப்பட்ட குதிரை இறந்த பின்பு, அதன் குட்டிகளை அடுத்தவர் யாராவது வாங்கி வளர்த்துக் கொள்வார். ஆனால், நலிவடைந்த தொழிலாளி மாள நேர்ந்தால் அவன் குடும்பத்தை யார் காப்பாற்றுவது?

அமெரிக்காவிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் இயந்திரம் தருவிக்கலாம். ஆனால், மனித இயந்திரங்களைத் தருவிக்க முடியாது. அந்த இயந்திரத்தையும் மனித இயந்திரம்தான் செய்கிறது. நூறில் ஒரு பங்காவது பாட்டாளி நலனில் அக்கறை காட்ட வேண்டும்.

தொழிலாளர் சமூகம், நல்ல பலம் பெற்றால் அவர்கள் ஈடுபட்டுள்ள பணிகளில் மேலும் தெம்போடு உழைப்பார்கள். மனமும் உடலும் மகிழ்ச்சியாக இருந்தால் உற்பத்தியின் அளவு அதிகரிக்கும்; செல்வம் வளரும்.

எனவே, தொழிலாளர் நலனுக்காக எவ்வளவு செலவிட்டாலும் அது சமூகத்துக்கு ஒன்றுக்கு ஒன்பதாகத் திரும்பி வரும். தொழிலாளருக்காகச் செலவிடப்படும் தொகை ஒரு நாளும் நட்டக் கணக்காகி விடுவதில்லை.

இன்று மனிதனைக் காட்டிலும் திறமையாகப் பணியாற்றும் நவீன கருவிகளைப் பற்றிக் கூறுகிறார்கள். அதையும் மனிதன்தான் செய்தான் என்பதை மறந்துவிடலாகாது!

உணர்ச்சியால் உந்தப்படுபவன் மனிதன். அந்த மனிதன் அருமையான இயந்திரம். அவனுடைய இதயத்தில் வலி - அவனது கண்களில் கண்ணீர் - அவனது நெஞ்சத்தில் வலி - அவனது உடலில் வாட்டம் காணப்பட்டால், அந்த மனித யந்திரத்திடமிருந்து முழுப்பயனும் பெறமுடியாது.

அந்த மனிதப் பிறவியின் மாண்பினை உணர்ந்து அவனது வலியினையும் வாட்டத்தையும் போக்கிடக் கிடைத்துள்ள நல்ல வாய்ப்பு இது. அந்த மனித இயந்திரத்தினைக் கவனித்தால் அது உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணை நிற்கும்.

தொழிலாளர் வாழ்வில் நிம்மதி ஏற்பட்டால்தான் தொழில் நேர்த்தியாக இருக்கும். குறைபட்ட மனத்தோடு அவர்கள் வேலை செய்தால் தொழிலில் நேர்த்தியிருக்காது - தரம் இருக்காது - பயனும் கிடைக்காது.

இயந்திரங்களை எந்த அளவு நேர்த்தியாக வைத்துக் கொளகிறோமோ அந்த அளவு அவற்றிலிருந்து பயன் பெற முடிகிறது.

காலையில் எழுந்தவுடன் பச்சைப் பசேலென்ற காட்சியும் பூங்காற்றும் வீசுகின்ற இயற்கையோடு ஒட்டி வாழ்தலே உடலுக்கு நலன் பயக்கும் என்று உடற்கூறு நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால், நாட்டிலே இப்போது நல்ல வயல்களெல்லாம் பாங்கான கட்டடங்களாகி விடுகின்றதைப் பார்க்கிறோம். தொழில்கள் அதிகமாகி வளரும்போது, புதிய நோய்களும் உண்டாவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆனால், இந்தக் காரணங்களால் நாம் தொழில் வளர்ச்சியை விட்டுவிட முடியாது. தொழில் வளர்ந்தால்தான் பொதுச் செல்வம் ஏற்படும். அதன் வாயிலாகத் தனிப்பட்ட மனிதன் வாழ்விலும் வளமுண்டாகும்.

தொழிலாளரது வாழ்வானது பாழ்நிலமாக அல்லாமல், பசுமையோடு பூங்காற்று வீசும் தோட்டமாக இருக்க வேண்டும்!

# முதல்வரின் 'மே தின' வாழ்த்துச் செய்தி

இன்று மே நாள்! உலகெங்கும் வாழும் தொழிலாளர் உள்ளங்களில் உவகை பொங்கிடும் வகையில் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது - இந்நாள்!

பேரறிஞர் அண்ணா அவர்கள், 'நாட்டிலுள்ள தொழில்களும் வேலைகளும் வரையறுக்கப்பட்டு, தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பள விகிதங்களும் விடுமுறை ஒய்வு, கிராச்சுடி போன்ற மற்ற சலுகைகளும் நிர்ண யிக்கப்பட்டு அவற்றைத் திறம்பட அமலாக்கவும் வழிமுறைகாணும் - இந்த அரசு' என்று கூறினார்கள்.

அதன்படி, 1967 முதல் 1976 வரையிலும் பின் 1989-90ஆம் ஆண்டு களிலும் அமைந்து - தற்போது 1996 மே முதற் கொண்டும் அமைந்துள்ள இவ்வரசு தொழிலாளர் நலம் பேணும் திட்டங்கள் பல வற்றைச் செயல்படுத்தி இந்தியாவின் இதர மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியுள்ளது.

தொழிலாளர் எழுச்சியை உலகம் உணரச் செய்த 'மே நாள்' மிகுந்த மதிப்புடன் கொண்டாடப்பட வேண்டும் என்பதற்காக - அந்தநாளை அரசு விடுமுறை நாள் என ஆணையிட்டது - இந்த அரசு.

தொழிலாளர் நலநிதி உருவாக்கி அதனை நிர்வகித்திடத் தொழிலாளர் நல வாரியம் தோற்று வித்தது இந்த அரசு.

தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை (கிராச்சுடி) வழங்கிடும் திட்டம் கண்டது இந்த அரசு.

தொழிற்சங்க நடைமுறைகளுக்கும் நல் வாழ்விற்கும் வழிகாட்டக் கூடிய தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் கண்டது இந்த அரசு.

ஒப்பந்தத் தொழிலாளர் நலன்காக்கத் தனிச்சட்டம் கண்டது - இந்த அரசு.

மேதின விழாவின் நூற்றாண்டையொட்டி, சென்னை நேப்பியர் பூங்காவிற்கு 'மேதினப் பூங்கா' எனப் பெயரிட்டு - அங்கு நினைவுச் சின்னம் அமைத்தது இந்த அரசு.

குழந்தைத் தொழி லாளர் மறுவாழ்வு நலநிதி ஏற்படுத்தி, குழந்தைத் தொழிலாளர் பணியினை நீக்கிடத் தீவிர நட வடிக்கைகளை மேற் கொண்டுள்ளது இந்த அரசு.

தற்போது, தொழில் நேயக் கொள்கைகளைக் கடைப்பிடித்து - ஒளிவு மறைவற்ற அணுகு முறைகளுடன் - புதிய பல தொழில்களைத் தொடங்கத் திட்டமிட்டு - தொழிலாளர்களின் வாழ்வை வளப்படுத்திட வழி வகுத்து வருகிறது இந்த அரசு.

இப்படி, இயன்ற வழிகளில் எல்லாம் தொழிலாளர்களின் நலன்களைக் காத்து வரும் இந்த அரசு - மே நாள் விழாவை மிகுந்த ஈடுபாட்டுடன் கொண்டாடுவதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகிறது என்பதனைக் குறிப்பிட விரும்புகிறேன். இத்தகைய உணர்வோடு தமிழகம் முழுதும் வாழும் தொழிலாளர்களும்-அவர்தம் குடும்பத்தாரும் வளமும் நலமும் எய்தி வலிவும் பொலிவும் பெற்றுச் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்திட என் இனிய மே நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

★

## சுமை தூக்கும் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள்!

- முதல்வர் கலைஞர்

**"இந்த மே தின விழாவிலே ஒரு அறிவிப்பினை உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். 1989-ஆம் ஆண்டு உங்களுக்காக ஒரு அறிவிப்பைச் செய்தேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் உணவு வழங்குகின்ற துறையிலே வேலை செய்து கொண்டிருக்கின்ற சுமை தூக்கும் தொழி லாளர்கள், - பத்தாண்டு காலம் பணி செய்தி ருந்தால், அவர்களை எல்லாம் நிரந்தரமாக ஆக்கவேண்டும், ஆக்கப்படும் என்று சொல்லி யிருந்தேன். சொன்ன குற்றமோ, என்னவோ அப்போது ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது! இப்போது மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கின்ற நான், இந்த மே தின விழாவிலே பிரகடனப்படுத்துகிறேன். பத்தாண்டு காலம் பணிபுரிந்திருந்தால், அவர்கள் எல்லாம் நிரந்தரமாக ஆக்கப்படுகிறார்கள்.**

- 'மே தின விழா'வில் (1.5.97) பேசியதிலிருந்து

# உழைக்கும் வர்க்கத்தின் தியாகத் திருநாள் மேதினி போற்றும் மே தின நாள்

**திரு. அ. ரகுமான்கான்**
தொழிலாளர் நலம் மற்றும்
வேலைவாய்ப்புத்துறை அமைச்சர்

உருண்டோடும் எல்லா நாட்களும்
உன்னத நாட்கள் அல்ல.

சில நாட்கள்தான் சாகா வரம் பெற்ற
சரித்திர நாட்களாக
நம் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன.
மேதினி எங்கும் கொண்டாடப்படும்
மே முதல் நாள், உழைக்கும் வர்க்கம்
தன் உரிமையை நிலைநாட்டிட
அமெரிக்க மண்ணில் வீரம் சொரிந்த
போராட்டம் நடத்திய தியாகத் திருநாள்!

சுரண்டல் ஒன்றையே குறிக்கோளாகக்
கொண்ட முடைநாற்றம் வீசும்
முதலாளித்துவத்தை எதிர்த்து
எட்டு மணிநேர வேலை, எட்டு மணி
நேர ஓய்வு, எட்டு மணி நேரப்
பொழுதுபோக்கு என்ற கோரிக்கையை
வலியுறுத்திப் பாட்டாளி வர்க்கம்
போர்க்குரல் எழுப்பிய நாள்.

**1986**-ஆம் ஆண்டு மே முதல் நாள்
சாதாரண நாள் அல்ல. தொழிலாளி
வர்க்கம் அணி திரண்டு ஆர்ப்பரிக்கும்
அலைகடலாய் மாறி எட்டு மணி நேர
வேலை என்ற கோரிக்கைக்காக
சிகாகோ நகரில் ஆர்ப்பாட்டமும்
வேலைநிறுத்தமும் செய்தது.

வரலாற்றில் எட்டு மணி நேர
வேலை கோரிக்கைக்காக முதல் குரல்
சிகாகோ நகரில்தான் ஒலித்தது.
அமெரிக்க மண்ணில்தான் தொழிலாளர்
சமுதாயம் இந்த இலட்சியக் கனவு
நிறைவேற ஒரு குருஷேத்திரத்தையே
நடத்தியது.





ஆனால், தொழிலாளர்களும் மனிதர்கள் தான் என்ற மனித நேயம் இல்லாமல் பன்னிரண்டு மணிநேரம், இருபது மணிநேரம் என்று அவர்களைக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்கிக் கொள்ளை இலாபம் சம்பாதித்த ஆலை நிர்வாகமும், அதற்கு ஆதரவான அரசும் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தைத் தடுத்திட அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து அராஜகத்தின் அணிவகுப்பை நடத்தியது.

சிகாகோ நகரில் உள்ள ஹே மார்க்கெட்டில் (Hay Market) தொழிலாளர்கள் தங்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி நடத்திய எழுச்சிப் பேரணியையும், கூட்டத்தையும் கலைத்திட அரசு காவல்துறையைத் தூண்டிவிட்டது. தொழிலாளர்களுக்கு எதிராகப் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. துரைத்தனத்தாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகிப் பத்துத் தொழிலாளர்கள் மரணத்தைத் தழுவினார்கள். பலர் படுகாயமுற்றனர். சிகாகோ நகரத்து வீதிகள் சிவந்த பூமியாகின.

இது மட்டும் அல்லாது ஹே மார்க்கெட்டில் தொழிலாளர்கள் வெடிகுண்டு வீசினர் என்ற குற்றச்சாட்டைச் சுமத்தி அவர்கள் மீது அரசு பொய் வழக்குப் போட்டது. விசாரணை என்பதன் பெயரால் ஒரு நாடகம் நடத்தி ஏழு தொழிலாளர் தலைவர்களை அரசு தூக்கில் இட்டது. ஒருவருக்குச் சிறைத் தண்டனை வழங்கியது.

இந்த அடக்கு முறைகளைக் கண்டு தொழிலாளர்கள் சமுதாயம் அஞ்சிடவில்லை. அலைகள் ஓய்வதில்லை என்பது

போலத் தொழிலாளர்கள் தொடர்ந்து போராடினார்கள். புகையும் எரிமலையாக மாறி தொடர்ந்து போராட்டத்தை நடத்தினார்கள். தங்கள் மீது பூட்டப்பட்ட அடிமைச் சங்கிலியை அவர்கள் தகர்த்து எரிந்தார்கள்.



விளைவு, ஆணவத்தின் கொடு முடியில் இருந்த அரசும் ஆலை முதலாளிகளும் பணிந்தார்கள். இரவு விடிந்தது. பொழுது புலர்ந்தது. எட்டு மணி நேரவேலை, எட்டு மணிநேர ஒய்வு, எட்டு மணிநேரப்பொழுது போக்கு என்ற தொழிலாளர்களின் கோரிக்கை வெற்றி பெற்று அது சட்டப்பூர்வமாக்கப்பட்டது. 1989ம் ஆண்டு பாரிசில் உருவாக்கப்பட்ட இரண்டாவது சர்வதேசிய அமைப்பு (Second International) இந்த மே முதல் நாளைத்தொழிலாளர்கள் நினைவு நாளாக ஆண்டு தோறும் கொண்டாட வேண்டும்
என்று முடிவு செய்து அறிவித்தது. உப்புக்கடல் சூழ்ந்த இந்த உருண்டையுலகில் ஜாதி, மதம், தேச எல்லை இவைகளை எல்லாம் கடந்து மே முதல் நாள் மே தின விழாவாக அகிலம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.



ஆனால் தொழிற்சங்க வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் 1986-ம் ஆண்டு மே முதல் நாளுக்கு முன்பாக 1856-ம் ஆண்டு ஏப்ரல் 21-ம் தேதி ஆஸ்திரேலியாவில் எட்டுமணி நேரம் வேலை, எட்டு மணி நேரம் ஒய்வு, எட்டுமணி நேரம் பொழுது போக்கு என்ற கோரிக்கை அமல் நடத்தப்படவேண்டும் என்று ஆஸ்திரேலியாவில் தொழிலாளர்கள் போராடி இருக்கிறார்கள்.

இதைப் போலவே இந்தக் கோரிக்கைக்காக மேற்கு வங்கத்தில் உள்ள ஹவ்ரா இரயில் நிலையத் தொழிலாளர்கள் 1862-ஆம் ஆண்டு கல்கத்தாவில் போராட்டமும், வேலை நிறுத்தமும் செய்திருக்கிறார்கள்.

இவைகள் எல்லாம் வரலாறு நமக்குத் தெரிவிக்கும் செய்திகள்.



இந்தியத் துணைக்கண்டத்தில்
தமிழ்நாட்டில்தான்
முதன் முறையாக மே தினம் கொண்டாடப்
பட்டது. தொழிற்சங்கத் தலைவர்
சிந்தனைச் சிற்பி சிங்கார வேலரின்
தலைமையில் 1923-ஆம் ஆண்டு சென்னை
கடற்கரையில் மே தின விழா நடைபெற்றது.
இந்த மே தின விழாவை அரசு விடுமுறையாக
அறிவிக்கவேண்டும் என்ற கோரிக்கையும்
மேதின விழாவில் வைக்கப்பட்டது.

47 ஆண்டுகளுக்குப் பிறகு 1970-இல்
பாட்டாளி மக்களின்
பாதுகாவலர், உழைக்கும் வர்க்கத்தின் உற்ற
நண்பன், முதல்வர் கலைஞர் தலைமையில்
உள்ள திமு.க. அரசு, இந்த மேதினத்தைச்
சம்பளத்துடன் கூடிய அரசு விடுமுறையாக
அறிவித்தது.

சென்னை நேப்பியர் பூங்காவில் மே தின
நினைவுச் சின்னத்தை முதல்வர் கலைஞர்
நிறுவினார்.
அது மட்டும் அல்லாது, அன்று வி.பி.சிங்
தலைமையில் இருந்த மத்திய அரசை
வலியுறுத்தி
மே தினத்தை சம்பளத்துடன் கூடிய அரசு
விடுமுறை நாளாக அறிவிக்கச் செய்ததும்
இன்றைய முதல்வர் கலைஞர்தாம்.

கலைஞர் தலைமையில் உள்ள தி.மு.க. அரசு
இன்று தொழிலாளர்களின் உரிமைகளைப்
பாதுகாத்துத் தொழிலாளர் நலச் சட்டங்களை
அமல் நடத்தி வருகிறது.

அமைப்பு ரீதியான தொழிலாளர்கட்கு மட்டும்
அல்லாமல், அமைப்பு ரீதியற்ற
தொழிலாளர்களுக்கும்
காவல் தெய்வமாக இன்று கழக அரசு
விளங்குகிறது.

தொழில்வளத்தைப் பெருக்குவோம்!
தொழிலாளர் நலத்தைப் பாதுகாப்போம்!
இதுவே கழக அரசின் இலட்சிய முழக்கம்!

***

# வியர்வை

## - முதல்வர் கலைஞர்



கடல்பெரிது காசினியில்
மழை இனிது மன்பதைக்கே
ஆற்றின் புகழ் மிகவாகும் அவனியிலே
கிணற்றுக்கும் கீர்த்தி பல உண்டென்போமே
குளமெல்லாம் குவலயத்தின் அமுதவாய்கள்; எல்லாம் சரி!
இத்தனைக்கும் முகில் கூட்டம் கண்ணீர் வடித்தால் அன்றோ
மழையாகிக் கடல் பொங்கும்.
ஆறு ஓடும் கேணி ஊறும் குளம் நிரம்பும்?
காரிருள் ஏன் தொலைந்தது?
கனவின்பம் ஏன் கலைந்த தென்று
காலை மலர் வடிக்கும் கண்ணீர் பனித்துளியாம்! தென்னம்
பாளை வடிக்கும் கண்ணீர்தான் மதுச் சாறு.
வாழை வடிக்கும் கண்ணீரே பால் ஆகும்.
ஏழை வடிக்கும் கண்ணீரோ வேல் ஆகும் வாள் ஆகும்.

> 'அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
> செல்வத்தைத் தேய்க்கும் படை'

எனக் கூறி; வியர்வைக்கு விரைந்திடுவோம்.
சிப்பியின் வியர்வையிலே முத்து பிறக்கும் - ஒரு
சிற்பியின் வியர்வையிலே சிலை பிறக்கும்.
உழவனின் வியர்வையிலே பசி பறக்கும் - ஒரு
மழவனின் வியர்வையிலே பகை பறக்கும்.
வலியோர்கள் வியர்வையெல்லாம் பன்னீராம்-மிக
எளியோர்கள் வியர்வையெல்லாம் செந்நீராம்.
உலைக்களத்தில் கொட்டுகின்ற வியர்வைதனைத்
தழல் உறிஞ்சும் - காதற்
கலைக்களத்தில் கொட்டுகின்ற
வியர்வையெலாம் சந்தனமாம் சவ்வாதாம்-
அதனை வியர்வை யென்றால் இலக்கியங்கள் ஒவ்வாதாம்!

- 28.9.68 அன்று பரமத்தி வேலூர்,
கண்டர் கல்லூரிக்
கவியரங்கில் கலைஞர் அவர்களின்
தலைமைக் கவிதையிலிருந்து.

# தொழிலாளர் துயர் களைவோம்!

**தேபேந்திரநாத் சாரங்கி,** இ.ஆ.ப.,
அரசுச் செயலர், தொழிலாளர் மற்றும்
வேலைவாய்ப்புத்துறை

இவ்வரசு பதவியேற்றது முதற்கொண்டு, இம் மாநிலத்திலுள்ள தொழிலாளர் அனைவருக்கும் குறிப்பாக அமைப்பு சாரா நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் துயர் களைவதில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. தொழிலாளர் நலனுடன் கூடிய தொழில் வளர்ச்சியே தொழில் அமைதிக்கு 'வழியாகும் என்பதே இவ்வரசின் சீரிய கொள்கையாகும். இந்நிலை பேணி காக்கப்பட்டால், அரசின் பெருமையும், புகழும் வளர்ச்சிப் பாதையில் அமையும் என்பது தெளிவான ஒன்றாகும். அதேவேளையில் பொது அங்கீகாரமும் இவ்வரசிற்குக் கிட்டும்.

இதனடிப்படையில் நீண்டகாலமாக மூடிக்கிடக்கும் ஆலைகளைத் திறக்க அரசு முனைப்புடன் செயல்பாடுகளை எடுத்துவருகிறது. இம்முயற்சியால் வசந்தா மில்ஸ் - கோயம்புத்தூர் மற்றும் அழகப்பா மில்ஸ், இராஜபாளையம் ஆகியவை நேரிடையாகப் பயன்பெற்றுள்ளன.

தற்போது மூடப்பட்டுள்ள சுமார் 30 ஆலைகளைத் திறப்பதற்கு முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு நிர்வாகத்தரப்பிற்கும், தொழிற் சங்கங்களுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து மேற்கொள்ளப் படவிருக்கின்றன. இம்முயற்சியின் விளைவாக இன்னும் பல ஆலைகள் திறக்கப்பட்டு, பல ஆயிரம் தொழிலாளர்கள் பயன்பெறுவார்கள் என இவ்வரசு நம்பிக்கையோடு உள்ளது.

தொழிலாளர் நலனிலும், அவர்களின் எதிர்பார்ப்புகளிலும் அக்கறை கொண்ட இவ்வரசு முதல்முறையாக 1997ஆம் ஆண்டு பொங்கல் திருநாள் பண்டிகைக்காகக் கருணைத்தொகையாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ.400 வழங்கியுள்ளது. இதன்மூலம் 16,919 தொழிலாளர்கள் ரூ.67,67,600 பெற்று பயனடைந்துள்ளார்கள். இதுவரை தீபாவளித் திருநாளுக்கு மட்டுமே இவ்வுதவி அரசுகளால் வழங்கப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் பி அண்ட் சி மில் இயங்குவது சம்பந்தமாக அரசு எடுத்த நடவடிக்கைகளைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இதுபோன்ற சிக்கலான பிரச்சினையைக் குறித்த காலத்தில் தீர்ப்பதில் இந்த அரசு பின்தங்கியதில்லை என்பது அறிந்ததே. தொடர்ந்து நடந்த பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு, பி அண்ட் சி மில் நிர்வாகத்திற்கும், தொழிற் சங்கத்திற்கும் இடையே அரசின் முன்னிலையில் பல உடன்பாடுகள் ஏற்பட்டு மில்லை 1.3.97 அன்று வெற்றிகரமாக மீண்டும் திறக்க முடிந்தது. இந்த மில்லின் தொழிலாளர்கள் பயன்படும் வகையில் அவர்களின் சம்பளம் முதலியவற்றை வழங்குவது உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது.

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு என்பது மற்றொரு முக்கியமான பிரிவாகும். இது அரசின் முக்கியக் கவனத்தைப் பெற்றுவருகிறது. மாநிலங்கள், குழந்தைத் தொழிலாளர் மறுசீரமைப்பு மற்றும் நலநிதியினைத் தொடங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தனது 10.12.1996 நாளிட்ட தீர்ப்பில் வலியுறுத்தி ஆணை பிறப்பிக்கும் முன்பாகவே, அத்தகைய ஒரு நிதியைக் குழந்தைத் தொழிலாளர்களின் கல்வி மற்றும் அவர்கள் நலத்திற்காக இந்த அரசு ஏற்படுத்த ஆணைகள் பிறப்பித்துள்ளது என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடத் தக்கதாகும். பெற்றோர்களின் வறுமை நிலை காரணமாகவே தொழிலில் திணிக்கப்படும் குழந்தைகளின் நலனில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பதை இது வெளிப்படுத்துகிறது. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்காக



ம் பல நடவடிக்கைகள் எடுப்பதற்குமுன், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மாநில முழுவதிலும் அமைந்துள்ள ஊறுபாடுடைய மற்றும் ஊறுபாடற்ற தொழிற்சாலைகளில் உள்ள குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய கணக்கெடுப்பினை நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். முழுமனதுடன் கூடிய விடாமுயற்சியின் மூலம் குழந்தைத் தொழிலாளர் முறை என்னும் இத்தகைய சமூகக் கொடுமையைக் குழந்தைத் தொழிலாளர்கள் உடல்நலம் மற்றும் குழந்தைப் பருவத்திற்குப் பாதிப்பை விளைவிக்கும் தொழிற் சாலைகளில் மட்டுமாவது முற்றிலுமாக நெருங்கிய குறுகிய காலத்தில் ஒழிக்க முடியும் என்பது இந்த அரசின் அசைக்கமுடியாத நம்பிக்கையும், கொள்கையும் ஆகும். மக்களிடையே குழந்தைத் தொழிலாளர் முறையின் கொடுமைகளைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படும் எந்தவொரு விழிப்புணர்வு இயக்கத்திற்கும் அரசு தனது முழுமையான ஆதரவைக் கொடுத்து வருகிறது. ஏனெனில், இத்தகைய சிக்கலான சமூக - பொருளாதார பிரச்சினையைப் பொதுமக்கள், வேலையளிப்போர், தொழிற்சாலைகள் மற்றும் அரசு சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றின் ஒத்துழைப்பின் மூலமாகவே தீர்க்க முடியும் என்று அரசு நம்புகிறது. குழந்தைத் தொழிலாளர் முறையை மேலும் சகித்துக் கொள்ள முடியாது என்ற கருத்தை அறிவிக்கும் வகையில் ஒவ்வொரு அமைப்பும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அமைப்பு ரீதியற்ற பிரிவு கவனிக்கப்படாமலே உள்ளது. இப்பிரிவினரின் வாழ்க்கைத் தரம் மற்றும் வேலை நிபந்தனைகள் பெருமளவிற்குச் சுரண்டப் படுகிறது. இந்த அடிப்படை உண்மையினை உணர்ந்து, இந்த அரசு தானே முன்வந்து பாதுகாப்பற்ற, குரல் கொடுக்க இயலாத அவர்களைச் சட்டப்படி பாதுகாக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றுள்ளது. அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர ஆய்வு செய்து, பயனுள்ள திட்டங்களை அமலாக்க, அரசுக்குப் பரிந்துரை செய்ய சம்பந்தப்பட்ட முகவர்களைக் கொண்ட தனிக்குழுக்கள் அமைக்கப்பட உள்ளன. கடந்த காலத்தில் யாரும் நினைத்திராத ஒரு புதுமையான திட்டமென இதனைக் குறிப்பிடலாம். இந்த மாநிலத்தில் 90 சதவிகிதம் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் வேலை நிபந்தனைகளின் முன்னேற்றம் ஒரு சுமுகமான மேம்பட்ட சமுதாயத்திற்கு வழிகாட்டுவதாக இருக்கும். அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் சட்டப்பூர்வமான சலுகைகளான ஓய்வூதியம், காப்புறுதி, மருத்துவ வசதி, வைப்புநிதி ஆகியவைகளைத் தனிக்குழுக்கள் அளிக்கும் அறிக்கையை ஆய்வு செய்தபின் அரசு அறிவிக்க எண்ணியுள்ளது.



குறைந்த அளவு ஊதியம் என்பது அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பிழைப் பூதியமேயன்றி வேறல்ல. சட்டம் மூலம் இத்தகைய ஊதியத்தை வழங்கத் தவறுகின்ற அரசு நிலைத்திருக்க எந்த உரிமையும் இல்லை. இந்தப் பின்புலத்தில்தான் இவ்வரசு 1948-ஆம் ஆண்டின் குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு தொழில்களுக்கான குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயம் செய்வதையும், மறுநிர்ணயம் செய்வதையும் முறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அது மட்டுமல்லாமல் இச்சட்டத்தின் அட்டவணையில் மேலும் நான்கு தொழில்களைச் சேர்த்து அவ்வட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள தொழில்களின் எண்ணிக்கையை விரிவுபடுத் தவுள்ளதையும் இவ்வரசு அறிவித்துள்ளது.

அத்தொழில்கள் 1. தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் 2. மருத்துவம் மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள் 3. செக்யூரிட்டி கார்டுகள் மற்றும் 4. இரசாயன உரத்தொழில் ஆகியவையாகும். குறைந்த அளவு ஊதியங்கள் ஐந்தாண்டுகளுக் கொருமுறைமறுநிர்ணயம் செய்யப்படவேண்டும் என்று மேற்கூறிய சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருந்தாலும்,

இவ்வரசைப் பொறுத்தவரையில் குறைந்த அளவு ஊதியங்களை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிர்ணயம் செய்யும் வழக்கத்தைத் தாமே முன்வந்து ஏற்றுக்கொண்டு, இத்தொழிலாளர்களுக்கு உண்மையிலேயே தேவையான ஊதியத்தை நிர்ணயம் செய்து வருகின்றது. குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயம் செய்யும்போது விலைவாசிக் குறியீட்டு எண்ணுக்கேற்ப மாறுபடும் அகவிலைப்படி நிர்ணயம் செய்வதையும் அதன் ஒரு பகுதியாக இவ்வரசு கட்டாய வழக்கமாகச் செய்துவருகிறது. தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் தொழிலதிபர்களால் தவறாமல் வழங்கப்படுவதையும் அதில் ஏதேனும் குறை காணப்பட்டால் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படுவதையும் உறுதி செய்து கொள்ளுமாறும் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத்துறையைச் சார்ந்த அலுவலர்களுக்குக் கண்டிப்பான அறிவுரைகளையும் இவ்வரசு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு, தொழிற்சாலைகள் மிகுந்துள்ள மாநிலங்களில் ஒன்று என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. துரிதமான, தொழில் மயமாவதனால் தற்போதுள்ள தொழிற்சாலைகளில் பணிகளின் அளவு அதிகரித்துள்ளதோடு புதிய தொழிற்சாலைகள் உருவாக்குதலும் அதிகரித்துள்ளது. மாநிலத்திலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்க- மேற்குறிப்பிட்டுள்ளவாறு புதிய தொழிற்சாலைகள் உருவாகும் அதே நேரத்தில், தொழிலாளர்கள் பாதுகாப்பும் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. இந்த அரசு ஆட்சி ஏற்றபிறகு தொழிற் சாலைகளில் ஏற்படும் விபத்துக்கள் கணிசமான அளவு குறைந்துள்ளது என்பது தொழிற்சாலைகளில் பாதுகாப்பு விதிகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படுகிறது என்பதையே காட்டுகிறது என்று சொல்லிக்கொள்வதில் இந்த அரசு திருப்தி கொள்கிறது.

ஒரு மாநிலத்தை விரைவான தொழில் மயமாக்குவதற்குத் தனித்திறம் வாய்ந்த மனித சக்திகள் தொடர்ச்சியான இயக்கத்திற்குத் தேவைப்படுகிறது. உற்பத்தி அளவு பெருக்கத்திற்காக மேன்மேலும் அதிக அளவில் நவீன இயந்திரங்களும், உபகரணங்களும் மற்றும் தனித்திறம் வாய்ந்த தொழில் நுட்பங்களும் தொழில் உலகத்தில் அறிமுகப் படுத்தப்படுகின்றன. இத்தொழில் மயமாக்குவதில் மேலும் உதவிகரமாக இருப்பதற்கு இவ்வரசு ஒரு முக்கியமான கொள்கை முடிவு எடுத்துள்ளது. அதன்படி, தொழிற்பயிற்சி நிலையங்கள் இல்லாத 218 பஞ்சாயத்து யூனியன் களில் படிப்படியாக மூன்று ஆண்டு காலத்திற்குள் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படும். அம்மாதிரியான தொழிற்பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துவதற்குத் தனியார்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதன்மூலம் உள்ளூர் இளைஞர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பு வசதிகள் கிடைப்பதுடன், அதே நேரத்தில் போதிய தனித்துவம் வாய்ந்த மனித சக்திகள் குறைவதால் தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படும் என்ற சூழ்நிலையும் தவிர்க்கப்படும்.

வேலைக்காகக் காத்திருக்கும் இளைஞர்களுக்கு சரியான மற்றும் உடனடித் தகவல்கள் வழங்கும் பொருட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள குறிப்புகளைக் கணிணிமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தங்களுடைய கல்வி முடிந்தவுடன், தங்களுக்கு வேலை கிடைக்க வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உறுதுணையாக இருந்து உதவி புரியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், படித்த இளைஞர்கள் தங்கள் பெயர்களை வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வருகிறார்கள். ஆண்டுதோறும் இதுபோன்று வேலை தேடுபவர்கள் தொடர்ந்து பல்லாண்டுகளாகப் பதிவு செய்து வருகிறார்கள். தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களின் அடிப்படையில், அவர்களில் பெரும்பான்மையோர் தங்களது பதிவுகளை மறு பதிவு செய்ய (Renewal) தவறிவிடுகிறார்கள். வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கும் அந்த இளைஞர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் வகையில், மறுபதிவு செய்ய அளிக்கப்பட்ட அதிகபட்ச காலத்தை 12 மாதங்களிலிருந்து 18 மாதங்களாக உயர்த்தி அரசு கொள்கை அளவில் முடிவெடுத்து ஆணைகள் வெளியிட்டது. அவ்வாறே, 1992, 1993, 1994 மற்றும் 1995 ஆகிய ஆண்டுகளில் தங்கள் பதிவுகளை மறு பதிவு செய்யத் தவறியவர்களுக்கு ஒருமுறை அவகாசமாக, மூன்று மாத காலம் வரை மறு பதிவு செய்ய அவகாசம் அளித்து அரசு ஆணைகள் வெளியிட்டது.

மேற்சொன்ன நடவடிக்கைகளானது, இந்த அரசு தொழிலாளர்கள் நலத்தையும், வேலைவாய்ப்பு அதிகரித்தலையும் கொள்கையாகத் தனது இதயத்தில் கொண்டு செயல்பட்டு வருவதைத் திண்ணமாக உணர்த்தும். இம்மாதிரி செயல்களினால் பொது மக்கள் நலம்பெற்று, அதன் காரணமாகப் பொருளாதார மேம்பாடு ஏற்பட்டு மாநிலம் வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ★

ாத வானம்நாம்; வாழ்வைப் பாடும்
சங்கீதப் பறவைநாம்; பெருமை வற்றிப்
போகாத நெடுங்கடல்நாம்; நிமிர்ந்து நிற்கும்
பொதியம் நாம்; இமயம் நாம்;

- மீ. இராசேந்திரன்



நல்வாழ்த்துகள்

**பவானி தாலுகா பஸ்**
**உரிமையாளர் சங்கம்**

பவானி.



நல்வாழ்த்துகள்

**வீரப்பன் ஏஜென்சீஸ்**

ஈரோடு.

அவன் குடியிருக்க இடமில்லை,
நல்லவேளை
பசி குடியிருக்க
அவன் வயிறுண்டு

- சிற்பி

### ...ாழிலாளர் நீதிமன்றங்கள்

★ தனியார் தொழிற்சங்கங்களால் தொடரப்படுகின்ற தொழில் தகராறுகளைத் தீர்த்துவைப்பதற்கென, 10 தொழிலாளர் நீதிமன்றங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

### மூடப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் பஞ்சாலைகள்

★ மூடப்பட்ட தொழிற்சாலைகளுள் 5 தொழிற் சாலைகள் திறக்கப்பட்டு, 2,895 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

### குறைந்த அளவு ஊதியச் சட்டம்

★ குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் விதிகளின் படி குறைந்த அளவு ஊதியம் ஐந்தாண்டு களுக்கு ஒரு முறை மாற்றி யமைக்கப் படவேண்டும் என்றிருந்த போதிலும், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குறைந்த அளவு ஊதியம் மாற்றியமைக்கப்படுகிறது.

★ தற்பொழுது குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயம் செய்யும்போது நாளொன்றுக்கு ரூ.35க்கும் குறையாமல் நிர்ணயம் செய்யப் படுகிறது.

### குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு

★ 9 மாவட்டங்களில் மாவட்டக் குழந்தைத் தொழிலாளர் செயல் திட்டங்கள் அமைத்து அவற்றின் வாயிலாகக் குழந்தைத் தொழிலாளர் களைக் கண்டறிந்து, சிறப்புப் பள்ளிகள் நடத்தி அவர்களுக்கு முறைசாராக் கல்வி புகட்டப்பட்டு வருகிறது.

★ குழந்தைத் தொழிலாளர் முறையின் கொடுந் தன்மைகளை நீக்கிட உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள கட்டளைகளை நிறைவேற்றும் பொருட்டு "குழந்தைத் தொழிலாளர் மறுசீரமைப்பு மற்றும் நலநிதி" எனும் நிதியத்தை இவ்வரசு அமைத்துள்ளது.

### பீடித் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்கள்

★ பீடித்தொழிலாளர்கள் நலத்திட்டத்தின்கீழ் முதற்கண்ணாகத் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் மேலப்பாளையம் மற்றும் முக்கூடல் ஆகிய கிராமங்களில் முறையே 439 மற்றும் 482 வீடுகள் கட்டித்தர முடிவெடுக்கப்பட்டு, அவர்தம் கடன் தொகையைக் குறைக்கும் வகையில் நிலம், கட்டட வரைபடம் தயாரிக்க மற்றும் பத்திரப்பதிவு கட்டணத்திற்கு ரூ.3.69 இலட்சங்களை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

★ மேலப்பாளையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரின் கட்டுப்பாட்டிலுள்ள கட்டட மையத்தின் மூலமாகக் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு இதுவரை ஏறக்குறைய 100 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

# தொழிலாளர் நலன்



## கட்டடத் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்கள்

★ கட்டுமானத் தொழிலாளர்கள் நலத்திட்டங்களைச் செயற்படுத்த சென்னை, மதுரை மற்றும் கோவை நகரங்களில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டு இயங்கிவருகிறது. இவ்வாரியத்தில் பதிவுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் தொகுப்பு தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் தகுதி உடையவர்கள் ஆகிறார்கள். இத்திட்டத்தின் கீழ், 1995-96 மற்றும் 1996-97இல் ஐந்து நபர்களின் வாரிசு தாரர்களுக்கு ரூ.50,000 வீதம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 1995-96இல் இரண்டு நபர்களுக்கு ரூ.7,500 வீதமும் 1996-97இல் ஒரு நபருக்கு ரூ.7,000 வழங்கப்பட்டுள்ளது.



## தொழிலாளர் நலம்

★ தமிழகத்தில் 52 இடங்களில் குழந்தைகள் காப்பகங்களுடன் கூடிய தையற் பயிற்சிப் பிரிவுகளும், 19 இடங்களில் தையற் பயிற்சிப் பிரிவுகளும் செயல்பட்டுவருகின்றன. இப்பிரிவுகளில் தொழிலாளர்களின் மனைவி மற்றும் திருமணமாகாத மகள்களுக்குத் தையற்பயிற்சி அளிக்கப்படுகிறது.பயிற்சிக் காலங்களில் உதவித் தொகையாக ஒவ்வொரு மாதமும் ரூ.40ம், தேர்வுக்குச் சென்றால் பயிற்சி பெற்ற காலம் முழுவதற்கும் மேலும் ஒவ்வொரு மாதமும் ரூ.20ம், தேர்வில் தேர்ச்சி பெற்றால் ஒவ்வொரு மாதமும் மேலும் ரூ.20ம், ஆக மொத்தம் ஒவ்வொரு மாதமும் ரூ.80 வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலம் ஓராண்டாகும். பயிற்சி முடிவில் பயிற்சியாளர்கள் அரசுத் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். தேர்வுக் கட்டணமும் வாரியத்தால் செலுத்தப்படுகிறது. மேலும் இதற்கான கீழ்நிலை/மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று ஒவ்வொரு மையத்திலும் முதல் மதிப்பெண் பெறுபவர்களுக்கு ஒரு தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்படுகிறது. குழந்தைகள் பிரிவில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு, பால், பழம், முட்டை ஆகியவை வழங்கப்படுகின்றன. அனைத்துக் குழந்தைகளுக்கும் தகுதி பெற்ற மருத்துவர்களால் மாதமிருமுறை மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இரண்டு ஜோடி டெரிகாட்டன் சீருடை குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

★ தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்தோர்களும் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத்தில் 13 இடங்களில் இலவசப் படிப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

★ மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் தங்குவதற்கென ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. மிகமிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகிறது.

★ ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 10வது மற்றும் 12வது வகுப்புத் தேர்வுகளில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களில் வரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முறையே ரூ.1000, ரூ.500 பரிசுத் தொகை வழங்கி ஊக்குவிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதற்காக ரூ.1.68 இலட்சம் 1997-98ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உறிஞ்சப் படுகையில்
உறையூர் சுருட்டும் சிவக்கும்
தோழா...பார்

- செ. ஆடலரசன்



நல்வாழ்த்துகள்

**விஸ்வா அக்ரோ எண்டர்பிரைசஸ் லிட்.,**

கோபி.

நல்வாழ்த்துகள்

**கோபி தாலுகா பேருந்து உரிமையாளர் சங்கம்**

கோபி.



தொழில் இன்றேல் அழிவாகும், அழிவதும்தொழிலே
தொழிலில்லா இடமில்லை, சுதந்திரம் தொழிலே,
அழகில்லா ஒன்றினை அழகாக்கும் தொழிலே,
அச்சமில்லா உச்சிதத்தின் ஆக்கம் தொழிலே!

- கவிஞர் கம்பதாசன்

பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சி வலியுறுத்தப்படும்

# வளமாகும் தமிழகம்

- முதல்வர் கலைஞர்

தமிழகத்தில் தற்போது 20,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீட்டுடன் 13 பொதுத் துறை நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம், சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிறுவனம், சேலம் உருக்காலை, இந்தியன் ரேர் எர்த் நிறுவனம் போன்ற பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் சுமார் 16,000 கோடி ரூபாய் மதிப்பில், விரிவாக்கல், உற்பத்தித் திறன் அதிகரித்தல் ஆகிய பணிகளை உடனடியாக மேற்கொள்ளத் தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

எனவே, இன்றுள்ள நிலையில், நாம் மேற்கொண்டுள்ள புதிய பொருளாதாரக் கொள்கையின்படி தனியார் தொழில்களை ஊக்குவிக்கின்ற - அதே நேரத்தில், ஏற்கெனவே கழக அரசு உருவாக்கிய கூட்டுத்துறை, இணைத் துறை போன்ற துறைகளோடு, பொதுத் துறைக்கும் நிச்சயமாக நல்ல இடத்தைத் தரும் என்ற நம்பிக்கையை அனைவரும் பெறலாம் என்று குறிப்பிட விரும்பு கிறேன்.

## இந்திய ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு

இந்தியாவினுடைய மொத்த ஏற்றுமதியிலே, 16 சதவீதம், தமிழ்நாட்டிலே இருந்துதான் செய்யப்படுகிறது. இந்தியாவினுடைய மொத்த மக்கள் தொகையிலே, தமிழ்நாட்டு மக்கள் தொகை 6 சதவீதம்தான். ஆனால், இந்தியாவினுடைய மொத்த ஏற்றுமதியிலே, 16 சதவீதம், தமிழ்நாட்டிலே இருந்து செய்யப்படுகிறது. அதிலும், முக்கியமாக, ''காட்டன் யார்ன்'' ''டெக்ஸ்டைல்ஸ்'', தோல் பொருள்கள், பனியன்கள் ஆகியவை, அந்த ஏற்றுமதியாகின்ற பொருள்கள் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, தொழில் துறை வளர்ந்ததா என்பதை ஒரு கேள்விக்குறியாக்கி, வளரவில்லை என்ற ஒரு தவறான பிரச்சாரம், நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் அதற்குச் சொல்லக்கூடிய சில விளக்கங்கள், யாரையும் புண்படுத்தாது என்று கருதுகிறேன். ஏனென்றால், 1967-ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிக்கு வந்த நேரத்தில், தமிழகத்திலே இயங்கிவந்த, தூத்துக்குடி துறைமுகத் திட்டம், நெய்வேலி நிலக்கரி நிறுவனம் முதலிய பொதுத்துறை நிறுவனங்கள் விரிவாக ஆக்கப்படவும், உற்பத்தியை அதிகரிக்கவும், வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும், தக்கவகையில் மத்திய அரசை வற்புறுத்தியதோடு, மாநில அரசின் சார்பில் அத்தகைய ஏற்பாடுகளுக்கான, தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறோம். நெய்வேலியிலே, இரண்டாவது சுரங்கம் வெட்டப்படவும், சேலம் இரும்பாலை அமைக்கப்படவும், மத்திய அரசோடு தொடர்ந்து போராடி, அவை நிறைவேற்றப்படுவதற்கு வழிவகுத்தது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நாடு மிக நன்றாக அறியும்.

தூத்துக்குடியிலே, இன்றைக்கு உலக நாடுகளெல்லாம் பாராட்டக்கூடிய அளவுக்கு, வளர்ந்திருக்கின்ற, ஆயிரம் அல்லது இரண்டாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மதிப்பீடு என்று சொல்லத்தக்க அளவுக்குள்ள ''ஸ்பிக்'' உரத் தொழிற்சாலை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத் திலேதான் நிறுவப்பட்டது என்பதையும் யாரும் மறந்துவிட இயலாது.

## சிப்காட்டை உருவாக்கியது இந்த அரசு

அதைப்போல, கழக ஆட்சிக் காலத்திலே தான், பொதுத்துறையின் மூலம் உருவாக்கப்படும் தொழிற்சாலைகள் மாத்திரம், தமிழகத்திலே தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்த முடியாது என்ற எண்ணத்தோடு, ஆர்வமிக்க தொழில் முனைவர்களை உற்சாகப்படுத்த, ஊக்கப்படுத்த, தொழில் வளாகங்களை அமைத்து, குறைந்த விலையிலே இடங்களை ஒதுக்கீடு செய்திட, தொழில் திட்டங்களுக்குத் தேவையான கடன் உதவியை, மூலதன மானியத்தோடு (Capital Subsidy) வழங்கிட ஒரு முடிவெடுத்து, ''சிப்காட்'' (State Industry Promotion Corporation of Tamilnadu) என்ற புதிய நிறுவனத்தைக் கழக அரசுதான், 1971-ஆம் ஆண்டு தோற்றுவித்தது என்பதையும் யாரும் மறந்திட இயலாது.

## ராணிப்பேட்டை தொழில் வளாகம்

அதைத் தொடர்ந்து ''சிப்காட்'' நிறுவனம், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான, அடிப்படை வசதிகள் அனைத்தையும், ஒரே இடத்தில் வழங்கக்கூடிய தொழில் வளாகங்களை அமைத்தது. அப்படி அமைக்கப்பட்ட இடங்களில் ஒன்றுதான் இராணிப்பேட்டை என்பதை மாண்புமிகு

உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

1973-ஆம் ஆண்டு 729.78 ஏக்கர் நிலப்பரப்பில் 168 கோடி ரூபாய் முதலீட்டில் 107 தொழில் நிறுவனங்கள் கழக ஆட்சிக் காலத்தில் அங்கே உருவாக்கப்பட்டன.

**ஒசூரில் தொழில் வளாகம்**

அதேபோல ஒசூரிலே 1974-ஆம் ஆண்டுதான் கழக ஆட்சிக் காலத்திலேதான் 500 கோடி ரூபாய்க்கு மேலான முதலீட்டில் 20,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெறக்கூடிய அளவுக்கு 186 தொழில் நிறுவனங்களை உருவாக்கினோம். இதுவும் கழக ஆட்சிக் காலத்திலேதான். தமிழகத்திலே பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளத்தைப் பெருக்கிடத் திட்டமிட்டு மானாமதுரையில் 225 ஏக்கரிலும், புதுக்கோட்டையிலே 110 எக்கரிலும் தொழில் வளாகங்கள் உருவாக்கப்பட்டன. இவை தவிர, இராமநாதபுரம் மாவட்டத்திலே உள்ள ஆனைக்காரன்பட்டி போன்ற பின்தங்கிய பகுதிகளில் தனியார் முயற்சியிலே தொழில் வளாகங்கள் அமைக்கும் முயற்சிகளுக்கும் ''சிப்காட்'' மூலம் அன்றிருந்த கழக அரசு ஊக்கமளித்தது என்பது நிதர்சனமான உண்மைகள் ஆகும்.

**சிட்கோவை உருவாக்கியதும் இந்த அரசே**

சிறு தொழில்களுக்கு உறுதுணையாக இருந்து உதவுவதற்காக 'சிட்கோ' நிறுவனத்தையும் கழக அரசுதான் 1971-ஆம் ஆண்டு தொடங்கியது.

**எல்காட் பிரிவை ஏற்படுத்தியதும் இந்த அரசு**

அதேபோல 1972-ஆம் ஆண்டில்தான் தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் "எல்காட்", மின்னணுத் தொழில்கள் தமிழகத்திலே வளம்பெற வேண்டுமென் பதற்காக ஒரு தொலைநோக்கான திட்டத்தோடு 1972-லே தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தில் மின்னணுப் பிரிவு ஒன்றை உருவாக்கி அதன் தொடர்பாகப் பல்வேறு தொழில் பிரிவுகளை ஏற்படுத்தியது.

Electronic Corporation of Tamilnadu தான் 1975-ஆம் ஆண்டு ''எல்காட்'' என்று சுருக்கமான பெயரோடு அமைந்தது என்பதையும் அவை உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ''எல்காட்'' நிறுவனம் வளர்ந்து ஏறத்தாழ 200 கோடி ரூபாய் அளவுக்கு தமிழகம் முழுவதும் மின்னணுத் தொழில் பிரிவு வளர்ச்சி பெற்றுள்ளன என்பதையும் நா மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ''சிப்காட்'', ''சிட்கோ'', ''எல்காட்'' போன்ற நிறுவனங்களைத் தோற்றுவித்ததன் மூலம் தொழி பெருவாரியாக தமிழ்நாட்டிலே வளருவதற்குக் கழ அரசு வழி வகுத்தது. தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தவும் கடன் வசதிகளை அவர்கள் தாராளமாகப் பெறவும் கழக அரசு உதவிடத் தொடங்கியது. மேலும் வரி விலக்கு அளித்தல், விற்பனை வரி• வசூலைத் தள்ளி வைத்தல், மின்கட்டணச் சலுகை அளித்தல் போன்ற பல்வேறு உதவிகளை வழங்கி புதிய தொழில்கள் தமிழகத்திலே உருவாகக் கழக அரசு காரணமாக இருந்தது. 1975-ஆம் ஆண்டு மேற்கு ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு சட்டமன்ற உறுப்பி திரு.வில்லியம் வித்தர்ஸ் என்பவர் தமிழ்நா வந்து திரும்பிச் சென்றார். அவர் த திரும்பியவுடன் மேற்கு ஆஸ்தி சட்டமன்றத்திலே பேசினார்.

**வெளிநாட்டுப் பாராட்டு**

தமிழகத் தொழில் வளத்தைப் ப ங்கே பேசினார், என்ன பேசினார் என்றால், தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகளுக்கு உதவுவதற்கான பல கவர்ச்சிகரமான கருத்துக்களைக் கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்கிட பெருமுயற்சி செய்வதோடு, பல்வேறு சலுகைகளையும் அளிக்கிறது. அச்சலுகைகளில், தமிழ்நாட்டில் தொடங்கப்படும் எந்த ஒரு வெளிநாட்டுத் தொழிற்சாலைகளுக்கும் இரண்டு ஆண்டு காலத்திற்கு வரி கிடையாது என்பதும், புதிய தொழிற்சாலைகளின் வளர்ச்சி காலத்தில் மின் கட்டணச் சலுகை அளிக்கப்படும் என்பதும் அடங்கியுள்ளன. இவற்றைச் சிறந்த பணிகள் என்று நான் கருதுகிறேன். நம் நாட்டில் தொழில் வளர்ச்சிக்காகத் திட்டமிடும்போது, அதாவது மேற்கு





ரேலியாவினுடைய தொழில் வளர்ச்சிக்காகத் டும்போது அவற்றை எல்லாம் கவனத்தில் ம... வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்' எல்... கள் மனம் திறந்து பாராட்டியது அப்... களில் வெளி வந்தி ருக்கிறது.

இ...ந்தியாவிலே மாத்திரம் அல்லாமல் வெ...க்காரர்களும் பாராட்டக்கூடிய அளவு நாம் தொழில் வளத்தைப் பெருக்கியிருக்கிறோம்.

**1996இல் இந்த அரசு அமைந்தபின்:**

கனிமங்கள் வெட்டியெடுக்கும் உரிமங்கள் வழங்குவதற்கான கொள்கையை ஒழுங்குப்படுத்தி, டெண்டர் முறை ஏற்படுத்தப் பட்டது. டெண்டர் முறை 1989-90 ஆகிய இரண்டு ஆண்டுகளில் 272 ஹெக்டேர் மொத்த நிலப்பரப்புடைய 103 இடங்களில் குவாரிகள் டெண்டர் விட்டதால், கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைத்தது. கடந்த கால ஆட்சியில் இந்த டெண்டர் முறையையே மாற்றி, விதி 39 என்ற ஒரு நடைமுறையைப் புகுத்தி, அதன் பலனாக, 93லிருந்து 96 ஏப்ரல் வரையில் மூன்று ஆண்டு காலத்தில் குவாரி குத்தகை மூலம் அரசுக்குக் கிட்டிய வருவாய் 5.12 கோடி தான். அந்த முறை மாற்றப்பட்ட காரணத்தால், இதன் தொடர்பான விழிப்புப் பணிக் குழு செய்த - 'விஜிலென்ஸ் கமிஷன்' செய்த ஆய்வு ஒன்றில் முந்தைய ஆட்சிக் காலத்தில் குத்தகை விடுவதில் சரியான நடைமுறை பின்பற்றப்படாததாலும், குத்தகைத் தொகை வசூலிக்கப்படாததாலும், அரசுக்கு 70 கோடி ரூபாயிலிருந்து 95 கோடி ரூபாய் வரை வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று மதிப்பிடப் பட்டுள்ளது. மீண்டும் கழக அரசு, 1996ஆம் ஆண்டு பொறுப்பு ஏற்ற பிறகு, அந்த 39 விதியை நீக்கிவிட்டு மறுபடியும் ஒப்பந்தப்புள்ளி, டெண்டர் முறை கடைப்பிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இன்றைக்கு இலாபகரமாக, அந்தத் தொழில் நடந்துகொண்டிருக்கின்றது என்பதையும் அதிலே எவ்வளவு இலாபம் என்பதை அடுத்து அறிவிக்கின்ற ஒரு கட்டத்திலே அறிவிப்பேன் என்பதையும் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**உயர்நிலைக் குழு**

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்குக்கூட ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அதிலே அனுபவம் வாய்ந்த தொழில் அதிபர்களும், அரசு அதிகாரிகளும், இளம் தொழில் முனைவோர்களும் இடம்பெற்று, அடிக்கடி அந்தக் குழு கூடி, அரசுக்குத் தேவையான ஆலோசனைகளை அது வழங்கி வருகிறது.

**உருவாக்கப்படும் புதிய தொழில்கள்**

★ இந்த அரசின் தொழில் நேயம் கொண்ட கொள்கைகள் `Industry-Friendly Policies' மற்றும் ஒளிவு மறைவற்ற, வெளிப்படையான `transparent approach' அணுகுமுறைகள் காரணமாகப் பல புதிய தொழில்கள் தமிழகத்திலே உருவாகிக் கொண்டிருக்கின்றன. 10 மாத காலத்தில் பல தொழில்கள் தொடங்கப்பட வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை மாத்திரம் இங்கே உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். ஏற்கெனவே, அவ்வப்போது கேள்விப்பட்டவைகள் என்றாலும், தொகுத்துத் தருவது என்னுடைய கடமை என்பதால் தொகுத்துத் தருகிறேன்.

★ 100 விழுக்காடு ஏற்றுமதியுடன் கூடிய புளூமிங் மீடோன்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் மலர் வளர்ப்பு (Flori-Culture) திட்டம் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒசூரில் அமைக்கப்படுகிறது.

★ 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எரி சாம்பலைப் பயன்படுத்தி பொருள்கள் தயாரிக்கும் திட்டம் ''ப்ளை ஆஷ்பேஸ்ட் ப்ளக்ஸ் கோல்ஸ்'' நிறுவனத்தின் மூலம் எண்ணூரில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ பொள்ளாச்சிக்கு அருகில் 100 விழுக்காடு ஏற்றுமதியுடன் கூடிய இறைச்சிப் பதப்படுத்தும் திட்டம் ரூ.169 கோடியில் தொடங்கப்படுகிறது.

★ 38.42 கோடி ரூபாய் செலவில் நவீன ஒருங்கிணைந்த தேங்காய்ப் பொருள்கள் உற்பத்தித் திட்டம் பொள்ளாச்சிக்கு அருகில் தொடங்கப்பட உள்ளது.

★ இங்கிலாந்து நாட்டு பில் கிங்டன் நிறுவனத்தின் சார்பில் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

சிங்கப்பெருமாள் கோவிலில் கண்ணாடித் தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது.

- ★ 40 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு டெலிகாம் நிறுவனத்தின் கண்ணாடித் தொழிற்சாலை மறைமலை நகரில் அமைக்கப்பட இருக்கிறது.
- ★ அசோக் லேலண்டு நிறுவனம் ஒசூரில் உள்ள தனது பிரிவை 630 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவுபடுத்தி ஆண்டுக்கு 10,000 லாரிகளை உற்பத்தி செய்யும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ★ சென்னை விமான நிலையத்திற்கு அருகில் 35 ஏக்கர் நிலத்தில் ஒரு நிரந்தர வர்த்தக மையம் அமைக்கப்பட உள்ளது.
- ★ ரூபாய் 350 கோடி மதிப்பீட்டில் கொரியா நாட்டின் கும்ஹோ டயர்ஸ் நிறுவனம் டயர் தொழிற்சாலை ஒன்றை நிறுவுகிறது.



- ★ கொரியா நாட்டில் ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் 2450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கார் தொழிற்சாலை ஒன்றை அமைத்து வருகிறது.
- ★ கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழில் வளாகத்தில் 115 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கார்பன் பிளாக் தொழிற்சாலை ஒன்று ஹிடெக் நிறுவனத்தினால் அமைக்கப்பட இருக்கிறது.
- ★ ஜப்பான் நாட்டு மிச்சுபிஷி கம்பெனியுடன் இணைந்து இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் 300 கோடி ரூபாய் மதிப்பில் லேன்சர் கார் தயாரிக்கும் தொழிற்சாலையைத் திருவள்ளூரில் அமைத்து வருகிறது.

**தமிழகத்தில் தொழில்வளம் பெருக்கிட புதிய அறிவிப்புகள் - தொழில் நகரியங்கள்**

தொழில்கள் தொடங்கப்படுவதற்குத் தேவையான உரிமங்கள் அனைத்தையும் ஒரே இடத்திலே வழங்கிட வகை செய்யும் 'ஒற்றைச் சாளரம் 'சிங்கிள் விண்டோ கிளியரன்ஸ்' குறித்து மசோ ஒன்று ஏற்கெனவே சட்டப்பேரவையிலே வைக்கப்பட்டுள்ளது.

**குவாரிகள் நிர்வாகத்தில் உள்ளாட்சி அமைப்பு :**

மணல், ஜல்லி, களிமண் குவாரிகள் மாவட்ட ஆட்சியர் புவியியல் துறை அலுவலர்களால் முறைப்படி குத்தகைக்கு விடப்பட்ட பின், குவாரிகளிலே இருந்து கனிமங்களை எடுத்துச் செல்வதில் எவ்வித முறைகேடுகளும் இல்லாமல், உள்ளாட்சிக்கு வரவேண்டிய முழு வருவாயும் வந்து சேர ஏதுவாக, குவாரி நடவடிக்கைகளைச் கவனிக்கும் பொறுப்பு உள்ளாட்சி மன்றங்களுக் இனிமேல் வழங்கப்படும். இதன்படி குவாரியிலி 'Load' - சரக்கு ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு மு அதற்குரிய காணிக் கட்டணத்தை (Seg fee) உள்ளாட்சி அமைப்பின் கணக்சி ல் செலுத்திவிட்டு அதன்பின், உள்ள மப்பு வழங்கும் வாகன அனுமதியைக் (Tr rmit) கொண்டுதான் லாரி சரக்குட ல்ல அனுமதிக்கப்படும். அனுமதி வழங்கும் பை ஊராட்சி மன்றத் தலைவர், ணத் தலைவருடனோ அல்லது வேறொரு உறுப்பின ருடனோ இணைந்து கவனிக்க வேண்டும். ஊராட்சி மன்றத்திற்கு இப்பொறுப்பு வழங்கப்படுவதால், தவறான வழிகளில் மணல், ஜல்லி முதலியன கடத்தப்படுவது தடுக்கப்படுவதோடு, ஊராட்சி மன்றத்திற்கு வருவாயும் பெருக வழியேற்படும்.

**ஒன்றியம்தோறும் தொழிற்பயிற்சி நிறுவனம்**

புதிதாக உருவாகும் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் அளவில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பதில் சிரமம் உள்ளது. எனவே, பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், நிறைய எண்ணிக்கையில் தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஐ.டி.ஐ. தொடங்கிட இந்த அரசு ஆவன செய்யும். இதன் விளைவாக ஏராளமான இளைஞர்கள் பல்வேறு தொழிற்பயிற்சிப் பிரிவுகளில் முறையான பயிற்சி பெற்று, உருவாகி வரும் புதிய தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள். இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு ஐ.டி.ஐ. அமைக்க முடிவெடுத்து அத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**கூட்டுத்துறையில் கிரானைட் தொழிற்சாலைகள்**

கிரானைட் கற்களைப் பயன்படுத்தி கூட்டுத்துறையில் 4 புதிய திட்டங்கள் ஒவ்வொன்றும்

ஹெக்டேர் பரப்பளவில், இந்த நான்கும் சேர்ந்து ,0 ஹெக்டேர் பரப்பளவில் கிரானைட் கற்களைப் யன்படுத்தி நடத்துகின்ற தொழில்களைத் தொடங்க ரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்குரிய லைப்புள்ளிகள் விரைவில் முறைப்படி கோரப்படும் ன்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மின்னணுப் பூங்காக்கள்

மின்னணுப் பூங்காக்கள் என்று சொல்லும்போது, நந்தவனம் என்று கருதிக்கொள்ளக்கூடாது. அதை 'தொழில் பார்க்' என்றும் அழைப்பது உண்டு. அந்த அளவிலே மின்னணு பார்க், மின்னணுத் துறையிலே ஏற்பட்டு வரும் தீவிர வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் கையில் சென்னையில் கேளம்பாக்கத்திலும், வையிலும் தொழில்நுட்பப் பூங்காக்களை ology Parks) நிறுவிட விலைப்புள்ளிகள் பட்டுள்ளன. அதேபோல சென்னைக்கு அ ன்றும் மதுரையில் ஒன்றுமாக இரண்டு இட ன்பொருள் நுட்பவியல் பூங்காக்களை (Soft no Parks) நிறுவுவதற்கும் இந்த அரசு திட் ளது என்பதைத் தெரிவித்துக் கொ ா.

### புதிய தொழில் மையங்கள்

வளர்ந்து வரும் தொழில் வாய்ப்புக்களைக் கருதி இளைஞர் சமுதாயத்திற்கு முறையான வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டுமென்ற நிலையில், சென்னைப் புறநகர்ப் பகுதியிலும், விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியும், கோவை மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத்திலும், புதிய தொழில் மையங்களைத் தொடங்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

### தொழில்துறை உருவாக்கும் துணைநகரங்கள்

சென்னையைச் சுற்றியே பல பெருந்தொழில் திட்டங்கள் உருவாகி வருகின்றன என்று ஒரு குறைபாடு இருந்துவருகின்றது. இட நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, தொழில் துறையின் சார்பில், ஹுண்டாய் கார் தொழிற்சாலை அமையும் திருப்பெரும்புதூருக்கு அருகில் 2000 ஏக்கர் பரப்பில் ஒரு துணை நகரமும், போர்டு கார் தொழிற்சாலை அமையும் சிங்கப்பேருமாள்கோயில் பகுதியில் 500 ஏக்கர் பரப்பில் ஒரு துணை நகரமும் அமைக்கப்படும். சென்னையிலேயே தொழில்கள் உருவாகின்றன என்பதை ஓரளவுக்கு மாற்று வதற்காக இந்த இரண்டு துணை நகரங்களும் பயன்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### தமிழகத்தில் சிங்கப்பூர் நிறுவனங்களின் முதலீடுகள்

சிங்கப்பூரிலே இருக்கிற சிங்கப்பூர் இந்திய வர்த்தகக் கழகம் (Singapore India Chamber of Commerce) - என்கின்ற அமைப்பு, தமிழ்நாட்டில், முதலீடு செய்வதைப்பற்றிச் சிங்கப்பூரில் இருக்கும் தொழில் முனைவோருக்குத் தகவல்கள் கொடுக்கும் ஒரு சாளரமாகச் (Window) செயல்பட ஒத்துக் கொண்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

### 7000 ஏக்கரில் பெட்ரோ - கெமிக்கல்ஸ் பூங்கா

டிட்கோவின் புதிய திட்டங்கள் புதிய எண்ணூர் துறைமுகத்தின் சுற்றுப்புறங்களில் சுமார் 7,000 ஏக்கர் நிலப்பரப்பில் பெட்ரோ-கெமிக்கல் பூங்கா ஒன்று நிறுவப்படும்.



கழிவு நீரைச் சுத்தப்படுத்தி மீண்டும் பயன்படுத்தும் வகையில் நல்ல நீராக மாற்ற சுத்திகரிக்கும் நிலையங்கள் அங்கு அமைக்கப்படும்.

### மேலும் பல தொழில்கள்

★ எஸ்.கே.எம்.குரூப் நிறுவனத்துடன் இணைந்து 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முட்டை பதப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

★ நேஷனல் பிளைவுட் லிமிடெட் நிறுவனம் மற்றும் ஜெர்மனியைச் சார்ந்த சையம்பெல் கெம்ப் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து 150 கோடி ரூபாய் செலவில் கரும்புச் சக்கையிலிருந்து சிறு பலகைகள் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

★ ஆல்கஹாலை அடிப்படையாகக் கொண்டு, இரசாயனப் பொருள்களைத் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

★ நார்வே நாட்டைச் சேர்ந்த நார்ஸ்கே ஹைட்ரோ நிறுவனத்துடன் இணைந்து பி.வி.சி. குழாய்க்குத் தேவையான மூலப்பொருள்கள் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான ஒப்பந்தம் கடந்த மாதம் கையெழுத்தாகி விட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ 7,500 கோடி ரூபாய் முதலீட்டில், நாப்தா கிராக்கர்ஸ் மற்றும் ஒலிபின்ஸ்- (Naphtha Crackers & Olefins) வளாகம் ஒன்று அமைக்கப்படும்.

★ சென்னை ஏற்றுமதி வளாகத்தில் 27 கோடி ரூபாய் செலவில் 100 சதவீத ஏற்றுமதியுடன் இணைத் துறையில் செயல்படுத்தக்கூடிய உலோகக் குழல் விளக்கு தயாரிக்கும் திட்டம் தொடங்கப்படவிருக்கிறது.

★ ஒசூர் பகுதியில் மலர் வளர்ப்புத் திட்டம் பல நிறைவேற்றப்பட்டு வருவதால், அத்திட்டங்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அங்கு 75 கோடி ரூபாய் செலவில் குளிரூட்டு வசதி, குளிரூட்டப்பட்ட வாகன வசதி முதலியவை களைக் கொண்ட மையம் ஒன்று அமைக்கப்படும்.

★ டிட்கோவுடன் இணைந்து ஈஸ்ட் பாலி புரோபிலின் (Biaxially oriented poly-propylene) பிஸ்பினால்-ஏ (Bisphenon-A) மற்றும் சக்தியூட்டப்பட்ட கரி ஆகியவற்றைத் தயாரிக்க 325 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்சாலை அமைக்கப்படும்.

★ பெயர் பெற்ற லட்சுமி மெசின் ஒர்க்ஸ் நிறுவனம் மற்றும் டிட்கோவின் இணை நிறுவனமான சிஸ்கால் மூலமாக 450 கோடி ரூபாய் முதலீட்டில் தேனிரும்பு (Siscol) தொழிற்சாலை தொடங்கப்பட்டுள்ளது. 210 கோடி ரூபாய் மதிப்பில், இரும்புத் தொழிற்சாலை அடுத்த ஆண்டு சனவரித் திங்கள் வாக்கில் உற்பத்தியைத் தொடங்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





★ 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் ஸ் ட் நிறுவனத்தால் தூத்துக்குடியில் தாமிரத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. அந்தத் தொழிற்சாலைக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள், அந்த எதிர்ப்பின் காரணமாக அரசு எடுத்த முயற்சிகள்- தொழிற்சாலையும் நடக்கவேண்டும், தொழிற்சாலையிலிருந்து வருகிற கழிவுப் பொருள்கள் காரணமாக மக்களும் பாதிக்கப் படக்கூடாது, மீனவர்களும் பாதிக்கப்படக் கூடாது என்று அரசு எடுத்த முயற்சியின் அடிப்படையில், அந்தத் தொல்லைகள் எல்லாம் தீர்க்கப்பட்டு, தொழிற்சாலை தொடங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ மணலியில் கூட்டுத் துறையில் ரூ.50 கோடியில் பல்க்ட்ரக் இண்டர்மீடியட்ஸ் தொழிற்சாலை அமைக்கப்படும்.

★ 70 கோடி ரூபாய் முதலீட்டில் இண்டஸ்ட்ரியல் என்சைம் தொழிற்சாலை தொடங்கப்படும்.

★ "டான்சம்" நிறுவனம் மூலம் விருத்தாசலத்தில் 1.4 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டு ஒன்றுக்கு 1920 டன் உயர்தர அலுமினியக் கற்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நடப்பாண்டில் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1997-98ஆம் ஆண்டு தொழிற்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து, சட்டப் பேரவையில் 23-4-1997 அன்று ஆற்றிய பதிலுரையிலிருந்து)*

ழை தெசவாளி
கத்தறியில்
நெய்யும் சிலந்தி

- ஆடலரசன்



நல்வாழ்த்துகள்
ஈரோடு ராஜேந்திரா சில்க்ஸ்
ஈரோடு.



# பாவேந்தரும் பறவைகளும்

முனைவர் 'சிலம்பொலி' செல்லப்பன்

இயற்கைப் பொருள்கள் கவிஞனை மகிழ்வு கொள்ளச்செய்வன அவற்றை நோக்கும்போது கவிஞன் மகிழ்வதோடு மட்டுமல்லாமல், தன் உள்ளத்தின் வெளிப்பாட்டினைக் கவிதையில் வடித்தும் தருகிறான். இயற்கைப் பொருளோடு இயைந்த உயிரினங்களும் கவிஞனை உணர்வு கொள்ளச் செய்கின்றன. பாவேந்தர் பாரதிதாசன், தம் கவிதைகளில் பறவைகளைக் கொண்டு பல அரிய செய்திகளைப் புலப்படுத்தியுள்ளார்.

பறவைகளைத் தனியே அவற்றின் இயல்புகளை விதந்தோதும் முறையிலும், மற்ற இயற்கைப் பொருள்களோடு இணைத்துக் காட்டும் முறையிலும், சமுதாயச் சிந்தனையை உள்ளுரையாகக் கொண்டு கருத்துரைக்கும் முறையிலும் பாவேந்தர் பாடியிருக்கக் காண்கிறோம்!

**சிட்டுக்குருவி**

சிறு குழந்தைகட்குச் சிட்டுக்குருவி கூடு கட்டிக் குஞ்சு பொரிப்பதை இயல் பாகவும் சுவையாகவும் எடுத்துரைக்கிறார். இதோ அந்தப் பாடல்:

'கெட்டிக்காரச்
சிட்டுக் குருவி
நெட்டைத்துடைப்பக்
கட்டை உருவி
பட்டுச் சேலை
இழையைச் சேர்த்தும்
கொட்டிய பஞ்சில்
கொஞ்சம் கோத்தும்
எட்டாச் சுவரை
ஒட்டிய வாரையின்
முட்டு முடுக்கின்
நட்ட நடுவில்
கட்டிய கூட்டில்
முட்டையும் இட்டது
ஒட்டிக் காத்துக்
குஞ்சும் பொரித்தது'

இரண்டு சீர்களில், ஒரே மூச்சில், நிறுத் தாமல் படிக்கும் வகையில் சிறப்புறப் பாடி யிருக்கிறார்.

**புறாக்களின் நெறி**

புறாக்கள் பல நிறத்தன. நிலா, செவ்விதழ் விரியாத தாமரை, மங்கையரின் கருங்கொண்டை, கட்டி ஈயம், காயாம்பூக் கொத்து, வாழைப்பூ ஆகிய நிறங்களுடன் அழகே உயிர்கொண்டு மேய்வதுபோலப் புறாக்கள் வட்டமாய் அமர்ந்து இரை மேய்கின்றன. ஒன்றையொன்று கொத்தித் துரத்துவதும் இல்லை விரட்டுவதும்

லை. இரையுண்ணும் அப்பறவை டம் மேல், கீழ் என்ற வேறுபாடுமில்லை.

'இட்டதோர் தாம ரைப்பூ

இதழ்விரிந் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி

இரையுண்ணும்; அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை குத்துமில்லை

வேறுவே றிருந்த ருந்தும்
கட்டில்லை; கீழ்மேல் என்னும்

கண்மூடி வழக்க மில்லை'.

ப ம் காணப்படும் ஒற்றுமை யுணா உயர்வு தாழ்வு கருதாத மன ஆறறிவு படைத்த மாந்தரிடம் இரு லையே என ஏங்குகிறார் பாவேந்தர்.

பெண்புறா தன் ஆணுக்கன்றி வேறொன்றுக்கு இணங்காது! ஒரு பெட்டை ஒளிவீசி நின்றாலும் வேறு சேவல் அதைத் திரும்பியும் பார்ப்பதில்லை. ஓர் இணையில் ஒரு புறா இறந்திட்டால்தான் ஒன்று மற்றொன்றை நாடுமாம்! ஒருவனுக்கு ஒருத்தி என்பது மட்டுமன்று; ஒருவன் ஒருத்தியர் இருவரில் ஒருவர் இறப்பரேல், மற்றவர் மறுமணம் செய்துகொள்ளலாம் எனும் கருத்தையும் புறாக்களைக் கொண்டு பாவேந்தர் மாந்தர்க்குக் கற்பிக்கிறார்.

இத்தகைய ஒழுக்கமுடைய புறாக்களிடையேயும் தவறுகள் நடந்துவிடுகின்றன.



ஒரு பெண் புறா தனித்து இருக்கிறது; அதன் ஆண் அல்லாத மற்றொரு ஆண்புறா அப்பெண்புறா வருந்தும் வண்ணம் தவறிழைத்து விடுகிறது. இது புறாக்களின் இயல்பும் அன்று, பண்பும் அன்றே! இத் தகாச் செயல் அவ் வாண் புறாவுக்கு எப்படி வந்தது? - பாவேந்தர் கூறுகிறார்:

'....... இந்தத்
தகாச்செயல் தன்னை அன்பு
தவழ்கின்ற புறாக்கள் தம்மில்
ஒருசில தறுத லைகள்
கவலைசேர் மக்க ளின்பால்
கற்றுக்கொண்டிருத்தல் கூடும்!'

தவற்றினை மனிதனைப் பார்த்துச் சில தறுதலைப் புறாக்கள் கற்றுக் கொண்டனவாம்! மாந்தரின் ஒழுக்கக் கேட்டினை மிக நுட்பமாக நையாண்டி செய்கிறார் கவிஞர்.

**பச்சைக் கிளி**

அடிமை வாழ்வில் கிடைக்கும் அற்ப சுகங்களுக்காக அதையே பெரிதென்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு, கூண்டுக் கிளியையும் விண்ணிலே தன்னிச்சையாய்ப் பறந்து திரியும் கிளியையும் சுட்டிக்காட்டி விடுதலை உணர்வின் பொருளை விளக்குகிறார் புரட்சிக் கவிஞர். கூண்டுக் கிளியிடம் சொல்வதுபோல் கவிஞர் சொல்கிறார்; உனக்குத் தின்னத் தித்திப்புப் பழம் தருவர்; மதுரப் பருப்பு வழங்குவர்; உன்னைப் பொன்னே மணியே என்று புகழ்வர்; ஆனாலும் வானில் பறக்கும் வண்ணக் கிளியைப் பார்! தன் விருப்பம்போல் வானவீதியில் வலம் வருகிறது; தென்னங் கீற்றிலே அமர்ந்து பொன்னூசல் ஆடுகிறது. உனக்கு அந்த உரிமை உண்டா? தச்சன் கூட்டினுள்ளேயேதான் அடைந்து கிடக்க வேண்டியிருக்கிறது. உணவு கிடைத்தால் மட்டும் போதுமா? எனக் கேட்கிறார். வாய்ப் பேச்சால் மட்டும் விடுதலை வந்துவிடாது பெரும் புரட்சியினாலேயே அதைப் பெற முடியும் என்பதை-

'அக்கா அக்கா என்று நீ
அழைத்தால்
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே!'

என அக் கிளிக்குச் சொல்லும் பாங்கில் கவிஞர் உலகுக்குச் சொல்கிறார்.



## அழகிய மயில்

பாவேந்தர் மயிலைப் பார்த்து, 'அழகிய மயிலே! அழகிய மயிலே! நீயும் பெண்களும் நிகர் என்கின்றனர். உனக்கோ நீண்ட கழுத்து உள்ளது! பெண்கள் கழுத்தோ குட்டைக் கழுத்தாய் இருக்கிறதே! அது ஏனோ?' என வினவுகிறார். மயில் பேசவா போகிறது? எனவே, அவரே விடையும் தருகிறார்.

'அயலான் வீட்டில் அறையில்
நடப்பதை
எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே
இயற்கை அன்னை
இப்பெண்கட் கெல்லாம்
குட்டைக் கழுத்தைக்
கொடுத்தாள்; உனக்கோ கறை
யான் றில்லாக் கலாப மயிலே
நிமிர்ந்து நிற்க நீள்கழுத்
தளித்தான்!'

மயிலிடம், 'மயிலே! இதை உன்னிடம் மட்டும்தான் உரைத்தேன். உன் மனத்தி லேயே போட்டு வை. இல்லையேல் மகளிர் கூட்டம் என்னை ஏசும்' என்றும் சொல்கிறார்.

இத்தோடு பாடலை நிறுத்தியிருந்தால், இது ஏதோ வேடிக்கைப் பாடல்போல் இருக்கிறதே! பெண்களை நையாண்டி செய்வதுபோல் இருக்கிறதே? இப்படியா ஒரு புரட்சிக்கவிஞர் பாடுவது? என வினவத் துடிப்போம். ஆனால், இதற்கு



தான் பாடலின் உயிர்ப்பான கருத்தை ரக்கிறார். பெண்கள் அயலார் வீட்டில் டப்பதை எட்டிப் பார்க்கும் சுருங்கிய ள்ளத்தினராக வாழ்வதற்கு ஆண்களே ரணம் என ஆண்கள் கூட்டத்தைப் வேந்தர் சாடுகிறார்.

பன்னெடுங்காலமாக ஆடவர் பெண்டிரை அடக்கியாண்டு வீட்டினுள்ளேயே அடை பட்டுக் கிடப்பவர்களாகச் செய்துவிட்டனர். பரந்த உலகைக் காணமுடியாதவாறு சுருங்கிய வீட்டினுள்ளேயே அடைபட்டுக் கிடந்ததால் அவர்கள் உள்ளமும் விரி ...றிச் சுருங்கியதாயிற்று.

**கான் றுரைப்பேன் புருஷர் கூட்டம்**
**பெ... ஆதிப் பெருநாள் தொடங்கி**
**திரு... யிற் செலுத்தலால்**
**சுருங்... ாம் விரிந்தபா டில்லையே!'**

நகை... வையாகச் சொல்வதுபோல் ஆணாதிக்கத்தை அழுத்தமாகக் கண்டிக்கிறார். அடிமையுற்றுக் கிடக்கும் பெண் சமுதாயம் விடுதலை பெற்று வீறுநடை போட வேண்டுமென விரும்புகிறார்.

## கோழிகள்

ஆதிக்க சக்திகள், ஏதோ அள்ளிக் கொடுப்பதாய்ச் சொல்லி, எளியவர்களின் உழைப்பின் பயனை விழுங்கி வாழ்கிறார்கள். உழைக்கும் சக்தி, கிடைத்தது கொண்டு நிறைவடைந்து விடலாகாது; உரிமை பெற்ற சக்தியாக விளங்கவேண்டும் என்பதை வீட்டுக் கோழியும் காட்டுக் கோழியும் உரையாடுவதன் வாயிலாக உணர்த்துகிறார், பாவேந்தர்.



வீட்டுக்கோழி, "வீட்டுக்காரர் காலையில் எனக்குக் கம்பு போடுவார், மாலையில் தவிடு பிசைந்து தருவார். இட்டளியைப் பிட்டுப் போடுவார்; இரவில் இன்னல் நேராமல் என்னை அடைத்துக் காப்பார். நோய் நொடி வராது வளர்த்து வருவார். அவர்கள் செய்யும் நன்மையை அளவிட்டுச் சொல்லமுடியாது" என்றது.

"உன்னால் அவர்கட்கு நன்மை இல்லையா?" எனக் கேட்டது காட்டுக் கோழி.

வீட்டுக்கோழி, "நான் முட்டை இடுவேன். வெளிவரும் முட்டையை வெடுக்கென்று எடுத்தே அனைவரும் அடைசுட்டு உண்டு மகிழ்வர். மேலும் முட்டைகளை அடைகாப்பேன்; குஞ்சுகள் வெளிப்படும். வீட்டுக்காரர்.

**'பதினைந்து நாளில்என் பசுங்குஞ் சுகளில்**
**இதுநன்று மற்றையது நன்றென்று**
**வாட்டம் பார்த்தே ஓட்டமாய் ஓடி**
**இரண்டு மூன்றைப் பற்றித் தலையைப்**
**பாளையிற் பாக்குக் காய்போல் திருகிப்**
**பச்சு டம்பின் பஞ்சுமயிர் சிரைத்துக்**
**குருதி கொட்டக் கூறிட்ட சதையை**
**நெய்யோடு நெய்யாய் நீர்ப்பதம் எய்தச்**
**'செய்' யெனத் தாளித்துச் சூப்பென**
**அருந்துவர்;**
**அப்போது நானோ அழுதுகொண்**
**டிருப்பேன்'**

என்றது.

அப்போது காட்டுக் கோழி சொல்லும்- 'முட்டைக்கும் குஞ்சுச் சூப்புக்குமாகவே உனக்கு இரை போடுகிறார்கள். தங்கள் நலத்திற்காக உன்னையும் உன் இனத்தையும் அழிக்கும் அவர்களா உனக்கு நன்மை செய்வார்கள்? நம் சொந்த இருப்பிடமாகிய காட்டிலே பூச்சி புழுக்களை உண்டு நீயும்

உன் உறவும் மகிழ்ந்து வாழலாம். கம்பு போட்டுக் கழுத்தைத் திருகும் வம்பு அங்கில்லை. பற; நம் இருப்பிடம் செல்வோம் என்றது.

'இறக்கை இருந்தும் பறக்க முடியவில்லையே' என்றது வீட்டுக்கோழி!

'அவ்வாறாயின் என் முதுகின் மீது ஏறு; எடுத்துச் செல்வேன் நான்' என்றது காட்டுக்கோழி.

இது பாவேந்தர் கூறுகின்ற ஓர் உருவகக் கதை. அடிமைப்பட்டவர்கள் தாங்கள் அடிமை என்பதை அறியா நிலையிலும், அறிந்தாலும் உரிமை பெறும் ஆற்றல் அற்றவர்களாகவும் இருக்கிறார்கள். ஆதலின் உரிமையோடு வாழ்பவர் அவ்வடிமைகட்குக் கைகொடுத்து உரிமைபெற உதவவேண்டும் என்னும் கருத்தை இக் கதை மூலம் பாவேந்தர் உணர்த்துகிறார்.

பண்டிருந்த தமிழ்ப் பெயர்கள் பல இடைக்காலத்தில் வடமொழியாக்கப் பெற்றன. தூய தமிழ்ப் பெயர் கொண்டிருந்த பறவைகள், இன்று வடமொழிப் பெயர்க… அழைக்கப்படுவதை ஒரு பாட… பாவேந்தர் சுட்டிக் காட்டுகிறார். கவிஞ… காட்டினுள் செல்கிறார்.

'முகத்திலே கொடுவாள் மீசை
வேடன், என் எதிரில் வந்தான்.
அகப்பட்ட பறவை காட்ட,
அவற்றின்பேர் கேட்டேன்! வேடன்
வகைப்பட்ட 'பரத்து'வாசன்
என்பதை 'வலியன்' என்றான்
சகோரத்தைச் 'செம்போத்து' என்றான்!
தமிழா நீ வாழ்க என்றேன்!

வேடன் பறவைகட்குத் தூய பெயர் சொன்னதைக் கேட்டு மகிழ்… துள்ளி அவனை மனநி… …டு வாழ்த்துகிறார்!

பாவேந்தர் பிறந்த நாள் ஏ… …ர் 29, அவருடைய நூற்று ஏழாவது பி… …ளைக் கொண்டாடும் நாம் அவர் காட்டி… தமிழ் வழியில் நடைப்யில்வோம் என உறுதி பூணுவோமாக!



## இறைவனைக் கண்டுகொள்!

உருத்திராட்ச மணிகளை உருட்டுவதை விட்டுவிடு! மந்திரமும், தந்திரமும் ஆடலும், பாடலும் அவனைக் காட்டமாட்டா! தாளிட்ட அடைபட்ட கோயிலின் இருளடைந்த மூலையில் யாரைப் பூசிக்கின்றாய்? கண்ணைத் திறந்து, உன் கடவுளை உன் முன்னிலையில் இல்லையென அறிந்துகொள்!

கடினமான தரையில் ஏர் கட்டி உழுவாரிடமும், சாலை அமைக்கச் சரளைக் கல் உடைப்போரிடமும் அவன் இருக்கிறான். அவர்களுடன் அவன் மழையில் நனைகிறான் வெயிலில் உலர்கிறான். அவன் ஆடையில் தூசி படிந்திருக்கிறது. உன் துவராடையைத் தூக்கியெறி! அவனைப் போலவே நீயும் புழுதியில் இறங்கி வா!

பூவையும் நறும்புகையையும் உன் பூசையையும் விட்டு வெளியே வா! உன் ஆடை கிழிந்து அழுக்கடைந்தால் என்ன? நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து, நின் இறைவனைக் கண்டுகொள்!

- தாகூரின் கீதாஞ்சலியிலிருந்து



கையெழுத்தை இடுவதற்குக்கூட இன்னும்
கற்கரித கைகள்தாம் இந்த மண்ணின்
மெய்யெழுத்துச் சரித்திரத்தை எழுதிச் செல்லும்!
மேதினமும் இதையேதான் திருப்பிச் சொல்லும்!

- கவிஞர் வைரமுத்து



நல்வாழ்த்துகள்
ராஜி குரூப் நிறுவனங்கள்
ஈரோடு - 1.



உடல்
காற்றைச் சுவாசிக்கலாம்
உயிர்
சுதந்திரத்தை மட்டுமே சுவாசிக்க முடியும்!

- கவிஞர் மு. மேத்தா

நல்வாழ்த்துகள்
வெள்ளக்கோயில் வட்டார
பஸ் உரிமையாளர் சங்கம்
வெள்ளக்கோயில்





# நீங்களே சொல்லுங்கள்!

சித்திரச்சோலைகளே! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே! - முன்னர்
எத்தனைத்தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே!

நித்தம் திருந்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே! உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!

தாமரை பூத்த தடாகங்களே! உமைத்
தந்தஅக் காலத்திலே-எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே!

மாமிகு பாதைகளே! உமை இப்பெரு
வையமெ லாம் வகுத்தார்-அவர்
ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்!

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே! உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ?-நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பினில்
உதித்தது மெய் அல்லவோ?



சீர்த்திகொள் போகப் பொருட்புவியே! உன்றன்
கீழிருக்கும் கடைக்கால் - எங்கள்
சீர்த்தொழிலாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்!

நீர்கனல் நல்ல நிலம்வெளி காற்றென
நின்ற இயற்கைகளே!-உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே!

தாரணியே தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ?-பசி
தீரும் என்றால் உயிர்போகும் எனச்சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?

எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ?-இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?

கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும்உத் தேசமில்லை-சொந்த
வலிவுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை!



பாவேந்தர்
பாரதிதாசன்

எனக்கு நல்லகாலம் வரும்போது
ஈக்களே! விருந்திற்கு
உங்களையும் அழைப்பேன்

- ஐசா/ஜப்பான் ஹைக்கூ



அனிபல் கரஷி வரைந்த ஓவியம்

நல்வாழ்த்துகள்
காங்கயம் நல்லெண்ணெய்
உற்பத்தியாளர் சங்கம்

காங்கயம்.

வயல்கள்...நகர்கள்
நடவாள்...சித்தாள்
மாற்றமில்லை வாழ்க்கை

- ஆடலரசன்



ப்ருகல் வரைந்த ஓவியம்

நல்வாழ்த்துகள்
ஈரோடு ஹாய்சரி டையிங் அசோசியேஷன்
ஈரோடு - 3.

# வாசகர் இதயம்

வணிக நிறுவனங்களுக்குத் தமிழ்ப்பெயர் ...டுவதுபற்றி நீங்கள் வெளியிட்டிருந்த செய்திகள் ...ன்போன்ற ஓவியர்களுக்குப் பெரிதும் உதவுவதாக இருக்கிறது. வருகிற வணிகர்கள் எப்படிப் பெயர் மாற்றுவது எனக்குழம்புகிற போது இதன்மூலம் தெளிவு படுத்தி வருகிறேன்.

**கண்.ஸ்ரீராமுலு,**
செம்பொன்னார்கோயில்.

ஆசிரியர் மடலில் பல நல்ல விஷயங்களை எளிமையாகக் காணமுடிகிறது; அதை முதல் ...க்கத்திலேயே வெளியிட்டால் என்ன ?

**சி. சிவகோபால்,**
இராமநாயக்கன்பாளையம்.

...ரசு நல்ல பல தகவல்களை மக்களுக்குக் கொடுத்து வருகிறது நன்றி.

**எம். ஞானசேகர்,**
சென்னை29.

...வர்களுக்குத் தவறான செய்திகளைத் தரும் பத்திரிக்கைகளை விடவும்-நல்ல தமிழையும், நல்... ...யும் போதிக்கும் தமிழரசு இதழ் தமிழ்போல் சிறக்கட்டும்.

**சத்தியசீலன்,**
இராமானுஜபுரம்.

எப்போதும் மகிழ்வோடிருக்கப் பெண்கள் அவசியம் படிக்க வேண்டிய இதழ் இது; பணி தொடர எங்கள் ஒத்துழைப்பு எப்பொழுதும் உங்களுக்கு உண்டு.

**ப.ஜெயபாரதி,**
நாவக்குறிச்சி.

கங்கைகொண்டானின் இலக்கிய வெள்ளம் கனவல்ல; காலத்தின் நனவே!

**ப. முருகேசபாண்டியன்,**
நாகூர்.

தமிழரசு அரசாங்க இதழாக மட்டுமன்றி அறிவியல் இலக்கிய இதழாகவும் வளரட்டும்; வாழ்க தமிழ்ப்பணி.

**கோ.தமிழ்வேந்தன்,**
சாலய்-சாலினி நூலகம், குடந்தை.

'மாணவர்களே வெற்றி நிச்சயம்' பகுதி, படிப்பில் ஆர்வமற்றிருந்த எனக்கு நல்ல ஊக்க மருந்தாக இருந்தது.

**இரா.ஜெயபாலன்,**
பாசார் மேட்டுச்சாலை.

வேலை வாய்ப்புச் செய்திகள் வெளியிட்டு வந்ததைத் தொடர்ந்து வெளியிட்டால் என் போன்ற வேலையற்ற பட்டதாரிகளுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

**எம். செல்லையா,**
பாண்டவர்மங்களம்.

பெரியாரின் விருந்தோம்பல்' இன்றைய இளைஞர்களுக்கு நாளைய வழிகாட்டியாகும்.

**எம். ஏகாம்பரம்,**
பாகாலா.

# மேநாள்

ஞா. மாணிக்கவாசகன்



மேநாள் மேதினி போற்றும் திருநாள்
உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்தவர்
வாழ்வில் வெளிச்ச விளக்கை ஏற்றிய
வெற்றித் திருநாள் மேநாள் அல்லவா?

குனிந்து குனிந்து கும்பிடு போட்டே
கூன் விழுந்து போனவர் நிமிர்ந்து
உரிமை முழக்கம் எழுப்ப உதவிய
உன்னதத் திருநாள் மேநாள் அல்லவா?

உலகம் தழைக்க உழைத்தவர் நாங்கள்
உருக்குலைந்து கிடப்பது எதனால்?
எங்கள் உழைப்பை உண்டு கொழுப்பவர்
எங்களை ஏய்த்துப் பிழைப்பது எப்படி?

நாயினும் கீழாய் மனிதர்கள் நாங்கள்
நடத்தப்படுவது நியாயமா என்ற
கோரிக்கை முழக்கம் கொடியேற்றம் அல்லவா
மேதின வெற்றித் தேரோட்டம் ஆனது!

கூலிக் காரர்கள் வேலைக் காரர்கள்
என்று தொழி லாளரை எல்லாம்
கேலி பேசிய காலம் மறைந்தது
உழைக்கும் மக்களை உலகம் மதித்தது.

முதலாளி தொழிலாளி என்கின்ற பேதம்
மெதுவாய் மறைந்து இருவரும் இணைந்து
தொழில் உறவு துளிர்த்திடச் செய்தது;
தோழமை உணர்வு வளர்த்திட வைத்தது!

உலகத் தொழி லாளரை எல்லாம்
ஒன்று படுத்திய உற்சாக வாசகம்
மேதினம் எழுதிய சூளுரை என்பதால்
மேநாள் மேதினித் திரு நாளானது!



ஈரோப் நாட்டிலு ...யம் துத்தநாக உருக்காலை

சோளக்காட்டுப் பொம்மை
தொப்பியைக் கழற்றுவதே இல்லை
மன்னர் முன்பும்

- டான்கயா/ஜப்பான் ஹைக்கூ


நல்வாழ்த்துகள்

அண்ணமார் டிரான்ஸ்போர்ட் சர்வீஸ்

ஈரோடு.

&

ஸ்ரீ அண்ணமார் ரீரேட்ஸ்,

திருச்செங்கோடு.

வயலின் விரித்த பாய்
அமர்ந்து நோக்குவேன்
ப்ளம் மரப்பூக்கள்

- பூசன் - ஜப்பான் ஹைக்கூ



வெர்மீர் வரைந்த 'தி லேஸ் மேக்கர்'

நல்வாழ்த்துகள்

**மெஸர்ஸ் எக்ஸ்போர்ட்டர்ஸ் ஆர்ட் மெட்டல்**

பூந்துறை ரோடு, ஈரோடு - 2.

&

**திலகா இரும்புத் தொழிற்சாலை**

ஈரோடு - 3.

# [illegible]ாவிடர் நிலையை உயர்த்திய தியாகராயர்

**- பேரறிஞர் அண்ணா**



தியாகராயர் பெரிய செல்வந்தர், பணம் படைத்தவர்; தியாகராயர் விரும்பியிருந்தால் வியாபாரத்தின் மூலம் பல இலட்சம் ஈட்டியிருக்கலாம். ஆனால் அவர் அதனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

தியாகராயர் விரும்பியிருந்தால் சென்னையிலேயே பெரும்பாலான இடங்களை அவர் சொந்தமாக வாங்கியிருக்க இயலும். பணத்தின் மதிப்பு [illegible]ன்றிருப்பதை விட அன்று பல மடங்கு [illegible]ந்திருந்தது. இன்றைய இலட்சம் அன்றைய ஆயிரம் [illegible]க்குச் சமமானது. அத்தகைய காலத்திலே பல [illegible]ம் படைத்த அவர் நினைத்திருந்தால் சென்னை [illegible]ன் முதலீட்டுப் பணமாக ஆக்கியிருக்கலாம். அ[illegible] நேரத்திலே பணியாற்ற பல ஆட்கள் அவ[illegible]ருந்திருக்கக்கூடும். எத்தனையோ சீம[illegible] சிற்றரசர்கள், வியாபார வேந்தர்கள், ஜமீ[illegible] உண்டு, களித்து, உல்லாச வாழ்வு வா[illegible] களியாட்டத்தில் காலத்தைக் கடத்திக் கொண்டு இன்பத்தை நுகர்ந்து கொண்டிருப்பதைப் போல், தியாகராயரும் இருந்திருக்கமுடியும்.

மேலும், தியாகராயர் விரும்பியிருந்தால், பழைய கோயில்களைப் புதுப்பிக்கும் வேலையிலோ, பளிங்கு மண்டபம் கட்டும் வேலையிலோ ஈடுபட்டிருக்கலாம். அவர் விரும்பியிருந்தால் தெற்கிலுள்ள பழனியைப் போல் வடக்கே ஒரு பழனியை உண்டாக்கியிருக்கலாம். இவைகளை ஏற்படுத்துவதற்குரிய பணம் அவரிடம் ஏராளமாக இருந்தது. அவர் இவைகளையெல்லாம் பெரிதாக மதிக்கவில்லை. தன்னுடைய சமூகத் தொண்டைத்தான் ஒரு பொருட்டாக மதித்தார். திராவிட சமூகத்திலே ஒரு பெரிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கினார். அரசியலிலே நம்மவர்கள் முதலிடம் பெற வேண்டுமென்று அவர் விரும்பினார். தியாகராயர் போக போக்கியத்தைவிட்டுத் தாமாகவே கல்லும், முள்ளும், காட்டாறும், கருங்குழியும் நிரம்பிய பாதை வழியே செல்லத் தொடங்கினார்.

சர். தியாகராயர் தோன்றி, திராவிடப் பெருங்குடி மக்கட்குத் தலைமைபூண்டு, அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்துவந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டு, சமுதாயத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல் துறை ஆகியவற்றில் இடம் பெற்று உழைத்தார்.

நம்முடைய அடிப்படைக் கட்டடம் பலமாக இருக்க வேண்டுமென்று அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். திராவிட இயக்கத்திற்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்.

அவர் களத்திலே தூவிய விதை நன்றாக வளர்ந்திருக்கிறது. அவர் அன்று பறக்கவிட்ட சமுதாயப் புரட்சிக் கொடியின் கீழ் நின்றுதான், நாம் இன்று பணியாற்றி வருகிறோம்.

எங்கு நோக்கிலும் திராவிடர் துன்ப வாழ்வில் சிக்கிச் சிதைந்து வந்த அந்தக் காலத்தில்தான் தியாகராயர் தோன்றினார். வேதனை மிகுந்த காட்சியைக் கண்டு உள்ளம் வெதும்பினார். சீறிப் போரிட்டுச் சீர்கேட்டை ஒழிக்கச் செயலிலே இறங்கினார். அவரைப் பொறுத்தமட்டும் அவருக்கு ஒரு குறையுமில்லை. மற்ற பிரச்சாரங்களைவிட அறிவுப் பிரச்சாரம்தான் முக்கியமானதென்று தியாகராயர் எண்ணினார். அன்றே அவர் அறப்போரைத் துவக்கினார். அந்த அறப்போர் இன்று வெற்றி பெற்றிருப்பதைக் கண்டு நாமனைவரும் பூரிப்படைகிறோம். இன்றைய தினம் திராவிட இனம் வளர்ந்திருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம். அரசியல் வாழ்விலே பலர் இடம் பெற்றிருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம். அன்று தியாகராயர் மத விஷயங்களிலே புகவில்லை. புரோகிதத்தை எதிர்க்கவில்லை. ஏனென்றால் முதலில் அவர், திராவிடர்களுக்குத் தன்னுணர்வை ஏற்படுத்தி மக்களைத் தட்டி எழுப்பி, பின்தான், மத விஷயத்தில் புக விரும்பினார். முதன் முதலில் நம் மக்களுக்கு என்ன தேவை என்பதை நன்குணர்ந்தே அவர் முதலில் அப்படி ஈடுபட்டார்.

தியாகராயர் நாம் வெற்றிமேல் வெற்றி பெற வழி காட்டினார். இருட்டறைகளிலும், காட்டு நிலத்திலும், கூட்டம் கூடி, இயேசுநாதர் உபதேசத்தைக் கேட்டு உலகம் உயர்ந்ததுபோல், தியாகராயரின் சொற்கள் தென்னாட்டில் மெள்ள மெள்ள, ஏழை எளியோர் குடிசையில் குடிபுகுந்த பின்னர், மாளிகைகளிலெல்லாம் சென்று, மக்கள் மன்றத்திலே புதியதோர் எழுச்சியை உண்டாக்கிவிட்டன. சர்.தியாகராயர் புதுமை பல செய்து காட்டினார்.

தியாகராயர் நம்மைவிட்டுப் பிரிந்தார். ஆனால் அவரது ஞாபகம் நம்மை விட்டுப் பிரியாது. சர்.பிட்டி.தியாகராயர் அரும்பாடுபட்டு வளர்த்த கொள்கைகளைக் கடைப்பிடித்து அதினின்றும் வளர்ச்சி பெற்று உயர்ந்தோங்கி வந்திருக்கும் திராவிடர் இயக்கம் வெற்றிமேல் வெற்றி பெறும்.

(30.6.1950 அன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற தியாகராயர் நினைவுக்கூட்ட உரையிலிருந்து)

நாங்கள்
விசுவரூபத்தின் விதைகள்
கொதிப்படைந்து விட்டாலோ
விசுவரூபங்கள் எங்கள்
வாமன வடிவங்கள்!

- தமிழன்பன்




நல்வாழ்த்துகள்

**தாராபுரம் தாலுகா**
**பஸ் உரிமையாளர் சங்கம்**

**தாராபுரம்.**

# மே தினம்.



*- சி. மகேந்திரன்*

ந்தத் தொழிலாளியும், ...யன் உதிப்பதற்கு முன்பா...வோ அல்லது மறைவதற்கு ...ன்பாகவோ தங்கள் ...ம்பத்தினரைச் சந்தித்துக் ...ாண்டதில்லை. பகல் வெளிச்சத்தில் சந்தித்துக் கொள்ள வாய்ப்பற்றவர் மெழுகுவர்த்தியின் மங்கலான வெளிச்சத்தில் ஏக்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வார்கள். ...ப்படியாகத்தான் புதிதாகத் ...ான்றி, எண்ணிக்கையில் ...ாக உயர்ந்து கொண்டி... தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை ...ருந்தது.

...ி வர்க்கத்தின் இந்த அவலங்களைப் பேசு... இலக்கியங்கள் எழுந்தன. மார்க்சிம் கார்க்... , பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் துன்ப... சோகங்களைத் தொழிலாளர்கள் ஒருவ... ...வர் பகிர்ந்துகொள்ளவும் புதிய எழுச்சி கொ... ...க உணர்வு பெறவும் உதவி செய்தது.

அழுக்கு நிறைந்த இடத்தில் கரப்பான் பூச்சிகள் வசிப்பதைப்போலத் தொழிலாளர்களின் குடியிருப்பு நெருக்கமாகவும், அசுத்தம் நிறைந்ததாகவும் இருந்தது. வயல்வெளிகளில் செழுமையாய் விளைந்து ஆலைக்குள் செல்லும் கரும்பு போலத் தொழிலாளர்கள் ஆலைக்குச் செல்வார்கள். இந்தக் கரும்பு இயந்திரத்தின் பற்சக்கரங்களுக்கிடையே சிக்கி, சாரத்தை எல்லாம் இழந்து சக்கையாக வெளியே தள்ளப்படுவதைப்போல எண்ணெய்ப் பசையும் கரிய புகையும் மிஞ்சிய உடல்களோடு வெளியே தள்ளப்பட்டார்கள்.

மார்க்சிம் கார்க்கியின் 'தாய்' தரும் இந்த விவரங்கள் முற்றிலும் உண்மையைத்தவிர வேறு எதுவுமில்லை என்பதற்கான ஆதாரங்கள் நிறையவே இருக்கின்றன.

தொழிலாளி வர்க்கத்தின் நூற்றாண்டு குமுறல் ஒட்டு மொத்தமாக அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில் 1886 மே மாதத்தில் வெடித்தது. சிகாகோ நகரம் தொழிலாளர்கள் நிறைந்திருந்தது. சோசலிசச் சிந்தனை நிறைந்த பலகுழுக்களும் செயல்பட்டன. இந்த முக்கியத்துவம்தான் மே தினப் போராட்டங்கள் தோன்றி உலகையே அதிர்ச்சி கொள்ளச் செய்யக் காரணமாகியது.

சிகாகோ நகரின் எழுச்சிக்கு முக்கிய வழிகாட்டுதல் ஐரோப்பாவில் பல ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இயக்கங்கள் முக்கியக் காரணமாயின. 1848இல் கார்ல் மார்க்ஸ், பிரடரிக் ஏங்கல்ஸ் வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை தெளிவுபடுத்தியது. தொழிலாளர்கள் இழப்பதற்கு எதுவுமில்லை - அடிமைச் சங்கிலியைத் தவிர, ஆனால் வெல்வதற்கு ஒரு புது உலகம் காத்திருக்கிறது என்று.

தொழிலாளர்களின் இரண்டாவது அகிலம், தொழிலாளர்களின் மீதான மூர்க்கத்தனமான சுரண்டல் குறித்து, பெரும் கவலையை வெளியிட்டது. 1866ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் தொழிலாளர்களுக்கு 8 மணிநேரம் உழைப்பும், 8 மணிநேரம் உறக்கமும், 8 மணி நேரம் ஓய்வும் தேவை என்றும் தீர்மானத்தை நிறைவேற்றியது. அமெரிக்காவின் சிகாகோ நகர் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

சிகாகோ நகரம் மே மாதத்தில் நடைபெற்ற போராட்டத்திற்கு முன் தயாரிப்புகளாக இருந்தது. உழைக்கும் நேரத்தை 8 மணியாகக் குறைக்க வேண்டும் என்பதற்காகத்தான். மே மாதம் சிகாகோவில் வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடப்பட்டது. மே மாதம் முதல் தேதியில் 25 ஆயிரம் தொழிலாளர்கள் குவிந்துவிட்டார்கள்.

தீயைப்போல் எல்லாத் தொழிற்சாலைகளிலும் பற்றிக்கொண்ட இந்தப் போராட்டம் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாக சிகாகோவிலுள்ள மைக்ரிப்போர் தொழிற்சாலையில் நடைபெற்றது. வேறு எந்த சமாதானப் பேச்சு வார்த்தையும் இல்லாமல் வேலை நிறுத்தப் போராட்டத்தை அடக்க முதலாளிகள் போலீசை முன் நிறுத்தினர். போலீஸ்காரர்கள் துப்பாக்கியால் சுட்டதில் 6 தொழிலாளர்கள் இறந்துபோனார்கள்.

சிகாகோ நகரின் ஹே மார்க்கட் சதுக்கத்தில் தான் தொழிலாளர்கள் அனைவரும், காவல்துறையின் இந்தக் கொடுமையைக் கண்டிக்க, இங்கே கூடிவிட்டார்கள். தொழிற்சங்க அமைப்பு மே மாதம் 3,4 தேதிகளில் பேரணியும், பொதுக்கூட்டம் ஒன்றும் இங்கு நடத்துவது என்று முடிவு செய்தனர்.

தொழிலாளர்கள் மாபெரும் எழுச்சியுடன் திட்டமிட்டபடி எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கடைசியாகப் பேச அழைக்கப்பட்ட தொழிற்சங்கத் தலைவர் தனது உரையை நிகழ்த்திக் கொண்டிருந்த போதுதான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

தொழிலாளர் பெருவெள்ளத்தின் நடுவில் கையால் எறியப்பட்ட ஒரு வெடிகுண்டு வெடித்தது. சிறிது காலத்திற்குப் பின்னர் இந்தக் குண்டை வீசியவன் காவல்துறையாலும் முதலாளிகளாலும் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கைக்கூலி என்பது நிரூபிக்கப்பட்டது.



இந்த வெடிகுண்டால் காவல்துறை அதிகாரி ஒருவர் இறந்துபோனார்.கலவரம் வெடித்தது. ஹே மார்க்கெட் சதுக்கமே யுத்த பூமியாக மாறியது. மோதலில் 8 போலீஸ்காரர்களும், 4 தொழிலாளர்களும் கொல்லப் பட்டனர்.

தொழிற்சாலைகளின் செயல்பாட்டை–தொழிலா ளர்களைத் தூண்டியதன் மூலம் பெரும் நஷ்டத்தை உருவாக்கியது. சட்டத்திற்குப் புறம்பாக அவர்களைப் பேரணி நடத்தி பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு என்ற பெயரில் அரசாங்கத்தைக் கவிழ்க்கச்சதி செய்தது முதலான பல வழக்குகள் தொழிற்சங்கத்தின் முக்கியத் தலைவர்களின் மீது தொடரப்பட்டது. மொத்தம் 27 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

இந்தக் குற்றம் சாட்டப்பட்டவர்களின் பட்டியலில் முக்கியத் தலைவர்கள் முறையே 1.பார்சன்ஸ் 2.ஸ்பைஸ் 3.எங்கெல் 4.பிஷர் 5.விங் 6.பீல்டன் 7.ஷேவ்ரா 8 நிபி ஆகியோர் அடங்குவர். வழக்கு நடைபெற்றதில் முக்கிய தலைவர்களான இவர்கள்தான், இந்த வன்முறையைத் திட்டமிட்டு நடத்தியவர்கள் என்று அறிவிக்கப்பட்டது. இதில் முதல் ஏழு பேருக்குத் தூக்கு தண்டனையும் பெயர் பட்டியலில் 8வதாக இடம்பெற்ற நிபி இவர்களுக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது.

இது அநீதி என்று உலகம் முழுவதும் கண்டனக் குரல் கேட்டது. ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலான கண்டங்களில் கடும் எதிர்ப்பு வெளிப்பட்டது. தண்டிக்கப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் பலமாக எழுந்தன. இதில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க மற்றொரு விஷயம், உலகின் மாபெரும் சிந்தனையாளர்களான, இங்கர்சால், பெர்னாட்ஷா போன்றவர்களும் இந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்று குரல் கொடுத்தனர். எழுதியும், பேசியும் இதற்கு ஆதரவு திரட்டினார்கள்.

உலகம் முழுவதும் எழுந்த இந்தக் கண்டன அலையால் அமெரிக்க அரசு சில தலைவர்களின் தண்டனையை மட்டும் குறைக்க முன்வந்தது.

பீல்டன், ஷேவ்ரா ஆகிய இருவரின் தூக்குத் தண்டனையும் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப் பட்டது. ஆனால் லிங் என்பவர் தற்கொலை செய்து கொண்டார் என்றும் ஆதாரங்களைத் தயாரித்து வைத்துக்கொண்டு சிறைச்சாலையிலேயே அடித்துக் கொன்றுவிட்டார்கள்.

உலகத் தொழிலாளி வர்க்கம் எவ்வளவுதான் முயற்சி செய்த போதிலும் அந்த நால்வரின் மரணத்தைத் தடுக்க இயலவில்லை. தோழர்கள் பார்சன்ஸ். ஸ்பைஸ், எங்கெல், பிஷர் ஆகியோர் அமெரிக்க அரசால் தூக்கிலிடப் பட்டார்கள்.

1885 மே1-ல் சிகாகோ நகரில் தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்காக எழுந்த இந்த நாளைத்தான் உலகம் முழுவதும் தொழிலாளர் கக் கொண்டாடுகிறார்கள்.

1890ஆம் ஆண்டு, லண்டனில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் மாமேதை ஏங்கல்ஸ் கீழ்க்கண்டவாறு கூறினார் - ஐரோப்பிய, அமெரிக்கத் தொழிலாளர்கள் ஒன்று திரண்டுவிட்டார்கள். சட்டப்படி, 8 மணி நேர வேலை என்னும் கோரிக்கையைக் கட்டாயம் பெற்றுவிடுவார்கள்.

1890ல், மே தினம் ரஷியாவில் கொண்டாடியபோது, லெனின் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். தொழிலாளர்களின் உலகம் தழுவிய ஒற்றுமையால் கவனம் கொள்ளாது, ஒரு தனிப்பட்ட தேசமோ அல்லது உலகமோ முன்னேற்றம் பெறுதல் என்பது சாத்தியமில்லை என்று தமது மே தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

இந்தியாவில் முதன்முதலில் மே தினம் கொண்டாடப்பட்ட இடம் சென்னைதான். தலைசிறந்த சீர்திருத்தவாதியான, ம. சிங்காரவேலர்தான் 1923இல் சென்னை ஐகோர்ட் கடற்கரையில் மே தின விழாவைக் கொண்டாடியுள்ளார்.

1946இல் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் தலைமையில் இயங்கிய இடைக்கால அரசுதான் மே தினத்தை இந்தியத் தொழிலாளர்களின் தினமாக அறிவித்தது.

கலைஞர் தலைமையில் அமைந்த தமிழக அரசும், அதைப் போலவே திரு. வி.பி. சிங் தலைமையில் இயங்கிய மத்திய அரசும்தான் மே தினத்தை அரசு விடுமுறை தினமாக அறிவித்தது.

நாற்று நடும் பெண்கள்
அனைத்திலும் சேறு
அவர்கள் பாடலைத் தவிர!

- ஜப்பானிய ஹைக்கூ




நல்வாழ்த்துகள்

**ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் சங்கம்**

ஈரோடு.

மனிதனை உழைப்பினை மதிப்போம் - கொடு
வறுமையை இடரினை மிதிப்போம்
இனியநல் லுலகினைப் படைப்போம் - அங்கே
எதிர்வரும் தடைகளை உடைப்போம்.

- கவியரசு முடியரசு



நல்வாழ்த்துகள்

**தமிழ்நாடு நல்லெண்ணெய்**
**உற்பத்தியாளர் சங்கம்**

**ஈரோடு - 4.**

**&**

**நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம்**

**ஈரோடு - 3.**

நல்வாழ்த்துகள்

ஈரோடு தாலுகா பஸ்
உரிமையாளர் சங்கம்

ஈரோடு.




நெஞ்சை நிமிர்த்துங்கள் தோழர்களே இனி
நேருக்கு நேர்நின்று பார்ப்போம் - சம
நீதிக்குப் போர்ப்படை சேர்ப்போம் - இனிப்
பஞ்சை பராரிகள் துஞ்சி இரந்துண்ணும்
பட்டினிக் கோலத்தை மாய்ப்போம் - நெஞ்சின்
பாரத்தை வேருடன் சாய்ப்போம்!

- கவிஞர் கண்ணதாசன்

# தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

தொழிலாளர் நலம் என்றாலே நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அளிப்பதே என்ற நிலையை 1972ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் மாற்றியுள்ளது. தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் மற்றும் அரசு ஆகியோர் அளிக்கும் நல நிதிப் பங்குத் தொகையினைக் கொண்டு பல்வேறு தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் பயன்பெறும் வகையில் நலத் திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின்படி மாநிலத் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் இயங்கி வருகிறது.

இவ்வாரியம் தமிழகம் முழுமையும் 52 இடங்களில் குழந்தைகள் காப்பகங்களுடன் கூடிய தையற் பயிற்சி பிரிவுகளும் மற்றும் 19 இடங்களில் தையற் பயிற்சி மட்டும் செயல்பட்டு வருகிறது. மேற்படி தையற்பயிற்சிப் பிரிவுகளில் தொழிலாளர்களைச் சார்ந்த அவர்களது மனைவி, திருமணமாகாத சகோதரிகளுக்கும் தையற்பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்காலங்களில் உதவித் தொகையாக பிரதி மாதம் ரூ.40ம், தேர்வுக்குச் சென்றால் பயிற்சி பெற்ற காலம் முழுவதற்கும் மேலும் பிரதி மாதம் ரூ.20ம் தேர்வில் தேர்ச்சி பெற்றால் மேலும் ரூ. 20ம் பிரதி மாதமும் ஆக மொத்தம் பிரதி மாதம் ரூ.80 வழங்கப்படுகிறது. இப்பயிற்சிக்காலம் ஓராண்டாகும். பயிற்சி முடிவில் பயிற்சியாளர்களுக்கான அரசு நடத்தும் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். இத்தேர்விற்கான தேர்வுக் கட்டணமும் வாரியத்தால் செலுத்தப்படுகிறது. மேலும் இதற்கான கீழ்நிலை மேல்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்று ஒவ்வொரு மையத்திலும் முதல் மதிப்பெண் பெறுபவர்களுக்கு ஒரு தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்படுகிறது. குழந்தைகள் பிரிவில் பயிலும் குழநதைகளுக்கு இலவச சத்துணவு, பால், பழம், முட்டை ஆகியவை வழங்கப்படுகின்றன. தவிர, அனைத்துக் குழந்தைகளுக்கும் தகுதி பெற்ற மருத்துவர்களால் மாதமிருமுறை மருத்துவ பரிசோதனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் இரண்டு ஜோடி டெரிகாட்டன் சீருடை குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்தோர்களும் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத்தில் 13 இடங்களில் இலவச படிப்பகங்களை இவ்வாரியம் நடத்தி வருகிறது.

மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் தங்குவதற்காக ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கு மிகமிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகிறது.

சென்னையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்கு / விசாரணை /



பேச்சுவார்த்தை ஆகியவற்றிற்காக வருபவ[illegible] தங்குவதற்காக ஜீவா இல்லம் என்ற ஓய்வு [illegible] டி.எம்.எஸ். வளாகம், சென்னை-6ல் கட்டப்பட்டு[illegible]

காசநோயால் அவதியுறும் தொ[illegible]கள் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை[illegible]ற்காக தாம்பரம், (26 படுக்கைகள்), திருப்பூர் ([illegible]கைகள்), ஆசாரிபள்ளம் (30 படுக்கைகள்), ஆ[illegible] (20 படுக்கைகள்) மற்றும் கீழ்ப்பெண்ண[illegible] (24 படுக்கைகள்) ஆகிய இடங்களில் உ[illegible] அரசு மருத்துவமனைகளில் இவ்வாரியம் தனிப்பிரிவினைக் கட்டியுள்ளது.

மேலும் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 10வது மற்றும் 12வது வகுப்புத் தேர்வுகளில் முதல் மற்றும் இரண்டாவது இடங்களில் வரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.1,000/- மற்றும் ரூ.500/- பரிசுத்தொகை வழங்கி ஊக்குவிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதற்காக ரூ.1.68 இலட்சம் 1997-98 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாரியம் 'உழைப்பவர் உலகம்' என்னும் மாத இதழை பிரதி மாதம் வெளியிட்டு வருகிறது. இவ்விதழ் உழைப்பவர் உலகம் வாசகர்கள், தொழிலாளர்கள் சம்பந்தமாகக்கேட்கும் வினா, அதற்கு ஆசிரியர் அளிக்கும் விடை, தொழிலாளர் நலம் பற்றிய உயர்நீதிமன்றத் தீர்ப்புகள், தொழிலாளர் நலம் பற்றிய செய்திகள், தொழிலாளர் கல்வி நிலையத்தாரால் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகளில் செய்திகள், தொழிலாளர்கள் மேம்பாட்டிற்காக அரசு அமைத்த குழுக்களின் பரிந்துரைகள் மற்றும் இன்னும் பல செய்திகளைத் தாங்கி இவ்விதழ் வெளிவருகிறது.

**எதிர்காலத் திட்டங்கள்**

தொழிலாளர்கள் சுற்றுலா செல்கையில் தங்குவதற்காக ஊட்டி, கொடைக்கானல் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் தங்கும் விடுதிகள் கட்ட நில ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**1996-97ஆம் நிதியாண்டில் (1.4.96 முதல் 31.3.97 வரை) பயனடைந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட தொகை**

| வரிசை எண் | நலத்திட்டங்களின் விவரம் | பயனடைந்தோர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | மூக்குக் கண்ணாடி உதவித் தொகை | 375 | 46,840 |
| 2 | தட்டச்சு / சுருக்கெழுத்துப் பயிற்சிக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் வழங்குதல் | 88 | 12,852 |
| 3 | பாடப்புத்தகம் வாங்க உதவித் தொகை | 1244 | 52,675 |
| | தொழிலாளர் ஈமச்சடங்கு உதவித்தொகை | 178 | 53,400 |
| | காது கேட்கும் கருவி வழங்குதல் | 10 | 9,929 |
| 6 | மூன்று சக்கர வண்டி வழங்குதல் (ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு) | 1 | 2,950 |
| 7 | ஊனமுற்ற தொழிலாளர்களுக்குச் செயற்கை உறுப்புகள் வழங்குதல் | - | - |
| 8 | பொறியியல் பட்டப் படிப்பு உதவித்தொகை | 47 | 56,400 |
| 9 | மருத்துவப் படிப்பு உதவித் தொகை | 15 | 15,000 |
| 10 | சட்டப் படிப்பு உதவித் தொகை | 2 | 2,400 |
| 11 | பி.எஸ்.ஸி. (விவசாயம்) | 1 | 1,200 |
| 12 | பொறியியல் பட்டயப் படிப்பு | 146 | 1,05,120 |
| 13 | மருத்துவ பட்டயப் படிப்பு | 1 | 720 |
| 14 | தொழிற்பயிற்சி உதவித் தொகை | 62 | 31,000 |
| 15 | மேல்நிலைப் படிப்பு உதவித் தொகை | 65 | 39,000 |

வயல் விவசாயி
படுக்கை...குடை...கடிகாரம்
வரப்பில் நிற்கும் மரம்

- செ. ஆடலரசன்



நல்வாழ்த்துகள்
ஈரோடு நகராட்சி

# தொழிலும் தொழிலாளர்களும்!

மூலம்: கலீல் ஜிப்ரான்

தமிழில்: முனைவர் நா. அழகப்பன்

எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறித் த ாக இருப்பது

ங்கை ஊர்வலத்திலிருந்து வெளியே எ த ஒப்பாகும்.

நீ லை செய்கின்ற போது

ஒரு குழலாக மாறி நல்லிசையை இவ்வுல காடுக்கிறீர்கள்!

வே பவர்கள் எல்லோரும் ஒற்றுமையாகச் சேர்ந்து ிசை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியிருக்கின்ற போது,

அவர்களிடமிருந்து விலகி நாணல் போல வளைந்து ஊமையாக-சோம்பேறித்தனமாக நீங்கள் இருக்கக்கூடாது.

காலங்காலமாகத் தொழில் என்பது ஒரு சாபக்கேடு என்றும்

அது துரதிர்ஷ்டமானது என்றும் வர்ணிக்கப்பட்டு வருகிறது.

அது தவறான கருத்தாகும்.

இந்த உலகத்தில் உங்களுக்கென்று சில கடமைகள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

நீங்கள் தொழில் செய்வதன் மூலம்

அந்தக் கடமையைச் செய்த திருப்தியை அடைகிறீர்கள்.

உங்கள் பணியைச் செய்கின்ற போது

நீங்கள் வாழ்க்கையின் இன்பத்தை அறிந்து கொள்வீர்கள்.

அந்த வாழ்க்கை இன்பமே வாழ்வின் இரகசியமாகும்.

பிறப்பு என்பது துன்பமயமானது

என்று கருதுவீர்களேயானால்

அது தவறான கருத்தாகும்.

உங்கள் நெற்றியிலிருந்து விழக்கூடிய வியர்வைத் துளிகள்



உங்களது தலையெழுத்தையே மாற்றியமைக்கும் வல்லமையுடையவை -/

மறந்து விடாதீர்கள்.

வாழ்க்கை என்பது

இருள் மயமானது என

உங்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

வாழ்வில் ஏற்பட்ட அலுப்பினாலும், அசதியினாலும்

அதை நீங்கள் சரியென்று எண்ணி இருக்கக்கூடும்.

விருப்பத்தோடு முயற்சி செய்தால் வாழ்வின் இருளைப் போக்கிக் கொள்ளலாம்.

பிரியத்தோடு உங்களது தொழிலை மேற்கொண்டால்

நீங்கள் ஆண்டவனுக்குப் பிரியமானவர்கள் ஆகிறீர்கள்.

ஒரு துணியை நெய்கின்ற போது

உங்களுக்கு மிகப் பிடித்தமான ஒருவர்

அந்தத் துணியை அணிந்து கொள்ளப் போகிறார்

என்ற எண்ணத்துடன் நெய்யுங்கள்.

ஒரு வீட்டைக் கட்டுகின்றபோது

அந்த வீட்டில் உங்களுக்குப் பிடித்தமான

ஒருவர் வாழப் போகிறார் என்று எண்ணுங்கள்.

அன்போடு விதைகளை விதையுங்கள்.

அவை தானியங்களாக வளர்ந்த பின்னர்

அவற்றை மகிழ்ச்சியோடு அறுவடை செய்யுங்கள்;

அந்தத் தானியங்களை

உங்களுக்குப் பிரியமான ஒருவர்

உண்ணப் போகிறார் என எண்ணுங்கள்.

நிலத்தை உழுது பயிர் செய்யும் விவசாயியை வி

சலவைக் கல்லால் கட்டிடம் கட்டும்

கலைஞர் உயர்ந்தவரெனச்சொல்கிறீர்கள்.

உங்கள் கால்களுக்குச்

செருப்புகளைத் தைத்துக் கொடுக்கும் தொழிலாளியை விட

துணிக்கு வண்ணக் கலவையிடும் தொழிலாளி

உயர்ந்தவரெனச் சொல்கிறீர்கள்.

நான் சொல்கிறேன்

எந்தத் தொழிலும் இழிந்தது அல்ல;

எல்லாத் தொழிலாளிகளும் சமமாக மதிச் வேண்டியவர்களே!

உங்களுடைய தொழிலை

உங்களால் பிரியத்தோடு செய்ய யா?

அப்படியானால் நீங்கள் உங்கள் விட்டு விட்டு

கோயிலின் வாயிலருகே மகிழ்ச்சியே ர்ந்து கொண்டு

வேலை செய்பவர்களிடமிருந்து பிச்சையே பெறலாம்.

நீங்கள் ஒரு ரொட்டித் துண்டை

வெறுப்போடு சுட்டுத் தயாரிப்பீர்களேயானால்

அந்த ரொட்டித் துண்டு

ஒரு மனிதரின் முழுப் பசியையும் தீர்க்காது.

அது அந்த மனிதரின் அரைப்பசியைத் தான் நீக்கும்.

நீங்கள் வெறுப்போடு

திராட்சை ரசத்தைத் தயாரிப்பீர்களேயானால்

உங்களது வெறுப்பால்

அந்தத் திராட்சை ரசம் விஷமாகவே மாறி விடுகிறது.

ஒரு பாடலை நீங்கள் பாடுகின்றபோது

வெறுப்போடு பாடுவீர்களேயானால்

அந்தப் பாடல், கேட்பவர்களுக்கு ஒரு பிடிக்காத சப்தமாகவே அமையும்!

அந்தச் சப்தம் பகல் - இரவு

ஆகிய இரண்டின் அமைதியையும் கெடுக்கும்.

(மகிழ்ச்சியான வாழ்விற்கு கலீல் கிப்ரான் அறிவுரைகள்-என, த.நா. இயற்கை மருத்துவ சங்கம், தமிழ்நாடு காந்தி நினைவுநிதி, மதுரை - 625 020 தயாரித்த நூலிலிருந்து.)

பிரம்படிக்குப் பயந்து
மாடுமேய்க்கும் சிறுவன்
கையில்...புல்லாங்குழல்

- செ. ஆடலரசன்




நல்வாழ்த்துகள்

**ஆஸ்ரம் மெட்ரிகுலேசன்**
**மேல்நிலைப் பள்ளி**

கொல்லம்பாளையம், ஈரோடு - 2.

நல்வாழ்த்துகள்

**காங்கயம் வட்டம் - வெள்ளக்கோயில் வட்டார பஸ் உரிமையாளர்கள் சங்கம்**

வெள்ளக்கோயில்.



மரக்கிளையில் குழந்தை
வரப்பில் பண்ணை
பயிரில் சிந்துச்

- அர்

# உழைப்பாளர்சிலை

'உழைப்பின் வெற்றி' சிலை 25.1.1959 அன்று சென்னை மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்டது. இந்தச் சிலையினை அப்போதைய ஆளுநர் திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள், பெருந் தலைவர் காமராஜ் அவர்களது தலைமையில் திறந்துவைத்தார்.

இச் சிலையினை வடிவமைத்தவர் திரு.தேவி பிரசாத் ராய் செளத்திரி. இவர் கிழக்கு வங்கத்தில் பிறந்தவர். ரவீந்திர பாரதி பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். இந்திய அரசினால் 'பத்மபூஷன்' விருதளிக்கப்பட்டு, கௌரவிக்கப் பட்டவர்.



இங்கே,
உழைப்பாளர்கள்
சிலையில் கூட
உழைத்துக் கொண்டுதான்
இருக்கிறார்கள்!

- பொன் செல்வ கணபதி

## துறைதோறும் தொழிலாளர் நலம்

**தொழில் துறை**

புதிதாக உருவாகும் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் அளவில் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்படாதிருக்கப் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், நிறைய எண்ணிக்கையில் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் (ITI) தொடங்கப்படும். இதனால் ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறுவர்.

வளர்ந்துவரும் தொழில் வாய்ப்புகளைக் கருதி,இளைஞர் சமுதாயத்திற்கு முறையான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் சென்னை புறநகர்ப் பகுதியிலும், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் தேசிய நெடுஞ் சாலையை ஒட்டியும், கோவை மாவட்டத்திலும் தருமபுரி மாவட்டத்திலும் புதிய தொழில் மையங்களைத் தொடங்கிட அரசு திட்டமிட்டிருக்கிறது.

**தொழிலாளர் நலத்துறை**

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புக் குறித்து, அண்மையில் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை நிறைவேற்றும் முகத்தான் - 'குழந்தைத் தொழிலாளர் மறுசீரமைப்பு மற்றும் நலநிதி' ஒன்றினை உருவாக்க அரசு முடிவெடுத்துள்ளது.

விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்த அரசு முடிவெடுத்திருக்கிறது; அறுவடைக் கூலி பணமாகவோ அல்லது அறுவடை செய்யப்பட்ட தானியத்தில் எட்டில் ஒரு பங்காகவோ அளிக்கப்படும்; இது பற்றிய அறிக்கை விரைவில் வெளியிடப்படும்.

கட்டிடத் தொழிலாளர்கள் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழிலாளர்களின் பிரச்சினைகளை அறிந்து, அவற்றுக்குத் தீர்வுகாணத் தனித்தனியே குழுக்கள் அமைக்கப்படும்.

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் நலத்திட்டம் முதல்கட்டமாக - சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அமைப்பு ரீதியற்ற நிலையில் உள்ள தொழிலாளர்களுக்கு, அரசின் நலத்திட்டங்கள் சென்றடைய வேண்டுமென்பதால் - திட்டச் சலுகைகள், மாநிலம் முழுதுமுள்ள கட்டிடத் தொழிலாளர்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்குடன், தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், நலச்சட்டம் மற்றும் திட்டங்களை மாநிலம் முழுமைக்கும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் வேலை பார்க்கும்போது விபத்தில் இறக்க நேரிட்டால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகை ரூ.50 ஆயிரம் வழங்கப்படும்; அத்துடன் ஈமச் சடங்கிற்கென ரூ.500 அரசால் அளிக்கப்படும்.

கட்டுமானத் தொழிலில் ஈடுபடுவோர் மக்கட் செல்வங்களுக்குப் பாதுகாப்பளிக்கின்ற வகையில், இந்த ஆண்டு முதல், சென்னை, மதுரை, கோவை மாநகரங்களில் முதல் கட்டமாகக் குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்படவிருக்கிறது.

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்[illegible]ம், அமைப்பு ரீ[illegible]ற தொழிலா[illegible] நலத் திட்டங்க[illegible] அமல் படுத்த[illegible]காணிப்புப் பிரி[illegible]ஒன்று அமைக்கப்படும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ்வரும் கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள், தமிழ்நாடு மருத்துவ மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள், இரசாயன உரத்தொழில், செக்யூரிட்டி கார்டுகள் ஆகிய 4 தொழில்களையும் குறைந்தபட்ச கூலிச் சட்ட அட்டவணையில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. இதனால் 68 என உள்ள அத்தொழில்களின் எண்ணிக்கை 72 ஆக உயரும்.

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள, நலத்திட்டம் முதல் கட்டமாகச் சென்னை, மதுரை, கோவை நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கு (கல் உடைப்பவர்கள், பாரம் தூக்குபவர்கள், கைவண்டி இழுப்பவர்கள்) இ.எஸ்.ஐ.பெறுவதற்கு, அரசு உரிய நடவடிக்கை எடுத்துவருகிறது.

மூடப்பட்டிருக்கும் 34 ஆலைகளைத் திறப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு கல்வி மாவட்டத்தில் 10வது மற்றும் 12வது வகுப்புத் தேர்வுகளில் முதல் மற்றும் 2வது இடத்தில் வரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.1000 மற்றும் 500 பரிசுத் தொகை வழங்கி ஊக்குவிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

திருச்சி, வேலூர், செங்கல்பட்டு அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் சி.என்.சி. இயந்திரங்கள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மகளிருக்கான தோல் தைத்தல் குறித்த குறுகிய காலப்பயிற்சி கிண்டி மகளிர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் துவக்க அரசு ஆணை வழங்கப் பட்டுள்ளது.

தொழிலாளர் புனர்வாழ்வு நிதியை மூடப்பட்ட தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கும் பாதிக்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கும் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வனத்துறை**

கடந்த ஆண்டு மட்டும் 11 ஆயிரம் ஏக்கர் அளவில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ், புதிய காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன; சமூகக்காடுகள் மற்றும் வனத்துறையில் பணிபுரியும் நிரந்தரமற்ற ஊழியர்கள் 5,200 பேர்களுக்கும் சம்பள உயர்வு அளிப்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

தேயிலைத் தோட்டக் கழகத்தைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டு தினக்கூலிகளாக இருந்த 800 பேர்களைப் பணிநிரந்தரம் செய்து அவர்கள் குடும்பம் வாழ வகை செய்யப்பட்டிருக்கிறது.

அரசு ரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 1[illegible]00 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கிறது. இதன் மூலம் 2,244 நபர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வனவரிலிருந்து வனச்சரகராகப் பதவி உயர்வு பெற, வனக் கல்லூரியில் ஓராண்டு பயிற்சி பெறுதல் வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்தி, 51, வனவர்களுக்குப் பதவி உயர்வு தரப்பட்டது.

**வேளாண்மை**

வேளாண் தொழிற்கல்விப் பாடத்தை 1997-98ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தவும், இந்த வேளாண் தொழில் கல்விப் பாடத்தை வேளாண் பட்டதாரிகளைக் கொண்டு நடத்துவதோடு, இப்பணிக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்படும் இவர்கள் பள்ளிகளில் இந்த வேளாண் பாடத்தோடு விஞ்ஞானப் பாடங்களான தாவரவியல், விலங்கியல், இரசாயனம், பௌதிகம் போன்ற பாடங்களையும் நடத்த அனுமதிப்பது என அரசு முடிவு செய்திருக்கிறது.

**மீன்வளம்**

மீனவர்களுக்கு, இந்த ஆண்டில் ஒரு விளக்குடன் கூடிய 4000 வீடுகளைக் கட்டித் தர அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

கடல் மீனவர்களுக்கு மட்டுமன்றி, உள்நாட்டு மீனவர்கள் 500 பேருக்கு இந்த நிதியாண்டில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், இலவச வீடுகள் கட்டித்தர அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மீனவர்களின் இறப்பு, முழு ஊனம் அடையும் நிகழ்வுகளில் வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.25



ஆயிரத்தில் இருந்து ரூ.35,000 ஆகவும் பகுதி ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் தொகை ரூ.12 ஆயிரத்திலிருந்து ரூ.17,500 ஆகவும் வழங்க மத்திய அரசு சம்மதித்து இத்திட்டம் 25.3.97 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மீனவர்களுக்கு மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து வழங்கும் ரூ.35 ஆயிரத்திற்கும் மேலான கூடுதல் காப்பீட்டுத் தொகை ரூ.15 ஆயிரத்தை மாநில அரசே ஏற்றுக்கொண்டு ரூ.50,000-ஐ இறக்க நேரிடும் மீனவர் குடும்பங்களுக்கும், நிரந்தரமான ஊனமுற்றவர்களுக்கும் தமிழக அரசே வழங்கிடும்.

சேதமடைந்துள்ள மீனவர் வீடுகளைப் பழுதுபார்க்க ஒரு வீட்டிற்கு ரூ.5000 வீதம் ரூ.100 கோடியைத் தமிழக அரசு வழங்கியிருக்கிறது.

மீன்பிடிப்பு குறைவாக உள்ள 4 மாதங்களில், மீனவர்களுக்கு நிவாரணமளிக்க அறிமுகப்படுத்தப்பட்ட சேமிப்பு நிவாரணத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு கடல் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினரும் ஒரு மாதத்திற்கு ரூ.45 வீதம் 8 மாதங்களுக்கு ரூ.360 செலுத்துவர்; இதற்கீடாக மத்திய அரசு ரூ.360ம், மாநில அரசு ரூ.360ம் என ஆக மொத்தம் ரூ.1,080 மீன்பிடிப்புக் குறைவாக உள்ள மாதங்களில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. 1997-98 முதல் மத்திய அரசு இதில் பங்கேற்க முன்வரவில்லை. ஆகவே, இதை ஒரு மாநில அரசுத் திட்டமாகச் செயல்படுத்தும் வகையில் மீனவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் ரூ.360 உடன் மாநில அரசின் பங்காக ரூ.360-ஐ சேர்த்து, இனி மொத்தம் ரூ. 720 மீனவர்களுக்கு வழங்கப்படும்.

வங்காள விரிகுடா திட்டத்தின் கீழ், விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள இந்த நிதி ஆண்டில் அரசு ரூ.10 இலட்சம் வழங்க முடிவு செய்திருக்கிறது.

தமிழ்நாடு அண்மைக் கடல் பகுதியில் இரண்டு இடங்களில் ரூ.8 இலட்சம் செலவில் மீன் உறைவிடங்கள் இரண்டு அமைக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

1996-97ல் பாரம்பரியப் படகுகளை இயந்திர மயமாக்குவதற்காக அரசு ரூ.11 கோடிக்குச் செலவின அனுமதி வழங்கியிருக்கிறது.

தூத்துக்குடி துறைமுகத்தில் பிடிக்கப்படும் மீன்களை ஏலம் விட, கூடுதலாக ஒரு மீன் ஏலக்கூடம் ரூ.13.20 இலட்சம் செலவில் இந்த நிதியாண்டில் அமைக்கப்படும்.

மல்லிப்பட்டினம் துறைமுகத்தைச் சிறப்புப் பழுது பார்க்க ரூ.17.30 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; அதேபோல், நாகை-காயிதேமில்லத் மாவட்டம் பழையாறு மீன்பிடி துறைமுகச் சீரமைப்பிற்காக ரூ.8 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மீனவக் கிராமங்களில் 36 இணைப்புச் சாலைகள் அமைக்க அரசு ரூ.100 இலட்சம் செலவிட ஒப்புதல் வழங்கியுள்ளது.

மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் 50-க்கு இயந்திரம் பொருத்திய மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்கி 1996-97ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது; அதேபோல் நடப்பு நிதியாண்டில், 50 மகளிர் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.35,000 விலையில் இயந்திரம் பொருத்திய 50 மூன்று சக்கர சைக்கிள் வாங்கி இனாமாக வழங்க ரூ.17.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

16,350 மீனவர்களுக்கு விரைவில் இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடி கலன்களும், வலைகளும் வழங்கப்படும்.

1997-98ல் சென்னை, கடலூர், குமரி ஆகிய இடங்களிலிருந்து இயங்கும் விசைப்படகு மீனவர்களுக்கு 200 தகவல் தொடர்புச் சாதனங்கள் வாங்க 25 விழுக்காடு மானியம் அளிக்க ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

### சமூக நலத்துறை

மகளிர் தொழில் முனைவோருக்குத் தொழில் தொடங்க நிதியுதவி அளிக்கும் புதிய திட்டப்படி குடும்பத்தில் முதல் தலைமுறையாகத் தொழில் முனையும் மகளிர் 250 பேருக்குத் தேவையான முதலீட்டில் ரூ.50 ஆயிரத்திற்குள் பத்து சதவிகிதத் தொகை மானியமாக வழங்கப்பட உள்ளது.

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், ஊனமுற்ற ஆண்-பெண் இருபாலருக்கும் முறைப்படி தையல் தொழிலை சுயவேலை வாய்ப்பாகக் கொண்டு தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள 2,000 தையல் இயந்திரங்கள் சென்ற ஆண்டு போலவே வழங்கப்படும்.

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை மாநிலம் முழுவதும் நீட்டிக்க முடிவுசெய்துள்ள நமது அரசு, நடப்பு ஆண்டில் 14 மாவட்டங்களில் ரூ.2.40 கோடி செலவில் மூன்று இலட்சம் மகளிர் பயன்பெறும்படி இத்திட்டத்தைச் செயல்படுத்தும். இதற்காக 1,418 மேற் பார்வையாளர்களும், 144 அமைச்சுப் பணியாளர்களும் ஓராண்டு காலத்திற்கு நியமிக்கப்படுவர். முழுமைக்கும் இதனை விரிவுபடுத்த ஐந்தாண்டு காலத்திற்கு ரூ.1,440 கோடி நிதி அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது.

அங்கன்வாடிப் பணியாளர்கள், உதவியாளர்கள் பணியிடங்கள் காலியிருப்பதை விதவைகள், ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஏழை, எளிய ஊனமுற்ற பெண்களைக் கொண்டு அரசு நிரப்பும்.

மகளிர் தொழில் பயிற்சி மற்றும் பொருள் உற்பத்தி நிலையங்களில் உள்ள பயனாளிகளுக்கு உதவும் வகையில் ஆண்டுக்கு - அரசுக்கு ரூ.10,8[illegible]0 கூடுதல் செலவாகும்.

1996-97ஆம் ஆண்டுக்கு, 3000 ஏழை எளிய பெண்களுக்குத் தையல் இயந்திரம் வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

### கைத்தறிகள்-கைவினைப் பொருட்கள் துணிநூல் மற்றும் கதர்த்துறை

மூடிய கூட்டுறவு நூற்பாலைகளைத் திறக்கவும், நலிந்த நூற்பாலைகளுக்குப் புத்துயிர் அளிக்கவும் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ரூ.12 கோடி வழிவகை கடனாக நிதியுதவி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம், நெசவாளர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை ரூ. 25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



கதர்த் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு காப்பீட்டுத் திட்டம் மூலம் குடும்பத்திற்கு ரூ.10,000 வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.




நெசவாளர் சங்க ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க ஒரு குழு அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.

நெசவாளர்களுக்கு 1.4.1997 முதல் 10 சதவீதம் அகவிலைப்படி உயர்வு கொடுக்கப்பட உள்ளது.

கோ ஆப்டெக்ஸ் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

கடந்த ஆண்டு பெய்த பெரு மழையினால் பாதிக்கப்பட்ட நெசவாளர் துயர் துடைக்க, இந்த அரசு ரூ.1.02 கோடி வழங்கியுள்ளது.

சேலத்தில் இயங்கிவரும் இந்தியக் கைத்தறித் தொழில் வளர்ச்சி நிறுவனத்திலிருந்து வெளிவரும் சிறந்த மாணவனுக்குப் பரிசுத் தொகையான ரூ.5000ஐ 1997-98 நிதியாண்டு முதல் ரூ.10,000ஆக உயர்த்தித்தர அரசு திட்டமிட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்கள் இறக்கும்போது வழங்க இருக்கும் கருணைத் தொகையை 3000 ரூபாயிலிருந்து ரூ.5000 ஆக உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது.

இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, காசநோய், புற்றுநோய் போன்ற மருத்துவச் சிகிச்சைகள் மேற்கொள்ள, வரும் நிதியாண்டிலிருந்து ரூ.10 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**கால்நடைப் பராமரிப்பு**

400 கால்நடை கிளை நிலையங்களில் வேலை இல்லாத கால்நடை மருத்துவப்பட்டதாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தமிழ்ப் பண்பாட்டுத் துறை**

சவகர் சிறுவர் இல்லங்களில் பணிபுரியும் பகுதிநேர ஆசிரியர்களுக்கு முன்னதாகத் தொகுப்பூதியம் வழங்கப்பட்டு வந்தது. பின்னர் இதனை மாற்றம் செய்து, பகுதிநேர ஆசிரியர்களுக்குத் தினக்கூலி வழங்கப்பட்டு வருகிறது. பகுதிநேர ஆசிரியர்களுக்குத் தற்பொழுது நாளொன்றுக்கு ரூ.30 வீதம் தினக்கூலி வழங்கப்பட்டு வருகிறது. தினக்கூலி ஊதிய முறையை மாற்றி, தொகுப்பூதியமாகத் திங்கள் தோறும் ரூ.900 வழங்கப்படும். வாரம் ஒரு நாள் ஊதியத்துடன் கூடிய விடுமுறையும் வழங்கப்படும். அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 12 நாட்கள் சிறுவிடுப்பு வழங்கப் படும்.

1997-98ஆம் ஆண்டுத் திட்டத்தில் கல் வெட்டாய்வாளர் பதவிகளை உதவி இயக்குநர்களாக நிலை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

ஆறு மாநகராட்சிகளிலும் மொத்தம் 200 ஆதிதிராவிட மகளிருக்கு ஆட்டோ ரிக்ஷா ஓட்டுவதில் பயிற்சி அளித்து, ஓட்டுநர் உரிமம் பெற்றுத் தந்து, 'தாட்கோ' மூலம் ஆட்டோ ரிக்ஷாக்களை வாங்குவதற்கு மானியமும், கடனுதவியும் அளிக்கப்படும்.

நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கும் ஆதிதிராவிட-பழங்குடி பட்டதாரி இளைஞர் 50 பேர்களுக்குக் கணினிப் பயிற்சி மையம் அமைக்க மானியமும் கடனும் 'தாட்கோ' மூலம் வழங்கப்படும்.

ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், ஆட்டோ ரிக்ஷா பழுது நீக்கும் பட்டறைகள் அமைக்க 50 'ஆதிதிராவிடப் பழங்குடியின இளைஞர்களுக்கு, ஒரு நபருக்கு ரூ.7 இலட்சம் மானியமும், கடனும் வழங்கி, இத்திட்டம் 'தாட்கோ' மூலம் செயல்படுத்தப்படும்.

கொத்தடிமைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக ஒழித்து, அவர்கள் சிறப்பாக வாழ்வதற்கான நிவாரண நிதியுதவிகளை வழங்குவதற்கு அரசு ரூ.50 இலட்சம் அனுமதித்துள்ளது. கொத்தடிமைகள் கணக் கெடுப்பிற்காக ரூ.15 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இத்தகைய தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு விடுவிக்கப்படும் குடும்பங்களுக்கு, உடனடி நிவாரண மாக ரூ.1000மும் நிரந்தர வருமானம் ஈட்டித் தரக்கூடிய தொழில்கள் துவங்க 100 சதவீத மானியமாக ரூ.9000மும் வழங்கப்படுகிறது.

**இந்து சமய அறநிலையத்துறை**

பொருளாதாரத்தில் பின்னடைந்துள்ள திருக் கோயில்களில் நாதசுர மங்கள இசை மீண்டும் முழங்க, முதற்கட்டமாக 25 நிதி வசதியற்ற புராதனத் திருக்கோயில்களுக்கு நாதசுர இசைக் குழுவினருக்கு (நாதசுரம், தவில், தாளம்) முறையே ரூ.1000, ரூ.750, ரூ.500 வீதம் சம்பளம் வழங்கத் துறை நிதியிலிருந்து நிதி உதவி செய்து அதற்கான நியமனங்கள் விரைவில் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் ஓதுவார்கள் நியமனம் செய்திடவும், அவர்களைத் திருக்கோயில் களில், இலக்கிய சமயச் சொற்பொழிவுகள் நடத்திடவும், நூல்களைக் கண்காணித்தல், தலவரலாறுகளைத் தயாரித்தல் போன்ற பணிகளுக்குப் பயன்படுத்த அரசு முடிவு செய்து, முறைப்படி செய்தித்தாள்களில்

விளம்பரம் செய்யப்பட்டு, நேர்காணல் தேர்வு நடத்தப்பட்டது. விரைவில் 150 திருக்கோயில்களில் தகுதிபடைத்த புலவர்கள் நியமனம் செய்யப்படுவர்.

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி**

புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைநகரங்களில், அரசு ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டங்கள் கரூர், நாகப்பட்டினம், திருவாரூர், நாமக்கல், பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் 738 அடுக்கு மாடி வீடுகள் சுமார் ரூ.24 கோடி மதிப்பீட்டில் 'ஹட்கோ' நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

சென்னை நகரில் சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் 240 அடுக்கு மாடி வீடுகளும், பட்டினப் பாக்கத்தில் உள்ள பழைய அடுக்கு மாடி வீடுகளை இடித்துவிட்டுப் புதிதாக 192 அடுக்கு மாடி வீடுகளும், இரண்டாவது கட்டப் பணியாகக் கூடுதலாக 80 குடியிருப்புகளும், அரசினர் தோட்டத்தில் சுமார் 250 அடுக்குமாடி வீடுகளும் கட்டப்படும். அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம் பகுதிகளில் 192 வீடுகளும், மொகப்பேர் பகுதியில் 88 வீடுகளும் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.




அரசு ஊழியர்களின் ஒட்டுநர்கள் மற்றும் கடைநிலைப் பணியாளர்களாக உள்ளவர்களின் வாடகை, வீட்டு வசதித் தேவையைக் கருத்தில் கொண்டு சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி போன்ற பெரிய நகரங்களில் ஒரு தனித்திட்டம் செயல்படுத்தப்படும். முதற்கட்டமாகச் சென்னையிலும், மதுரையிலும் ரூ.150 இலட்சம் செலவில் 100 அடுக்குமாடி குடியிருப்புகள் இந்த ஆண்டு கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்போது வாரியத்தில் பணியாற்றுபவர்களுக்கு உள்ள வாடகைக் குடியிருப்புகள் போதுமானதாக இல்லை. முதற்கட்டமாக 15 மனைப்பரப்பில் 48 அடுக்குமாடி வாடகைக் குடியிருப்புகள் கட்ட ரூ.201 இலட்சம் செலவாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு வேண்டிய நிதி 'ஹட்கோ' நிறுவனத்திடமிருந்து பெறப்படும்.

பணியில் இருக்கும்போது உயிர் நீத்த வாரிய ஊழியர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப் படையில் வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஆறு இளநிலை உதவியாளர்கள் மற்றும் 12 அலுவலக உதவியாளர்கள் போன்ற பதவிகளின் பணிநியமனம் அளிக்க வாரியம் முடிவு செய்துள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை**

பிற்படுத்தப்பட்டோர் 150 பேருக்கும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் 100 பேருக்கும் ஆக மொத்தம் 250 பேர்களுக்குக் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி ஆண்டுதோறும் அளிக்கப்படுகிறது. இதற்கென ஆகும் முழுச் செலவினத்தையும் அரசு ஏற்றுக்கொள்கிறது. 1997-98ஆம் ஆண்டுக்கு ரூ.21.20 இலட்சம் செலவிடப்படும். இதனால் உயர் கல்வி பெறாத ஏழை, நடுத்தர மக்களுக்கு வேலை பெறும் வாய்ப்பு அதிகரிக்கப்படுகிறது. தட்டச்சு/சுருக்கெழுத்து மற்றும் தொலைபேசி/தொலையச்சு இயக்கம் ஆகியவற்றிலும் இவ்வகுப்பினர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, குறிப்பாக ஏழைப் பெண்கள் வேலை பெற்றிடும் வாய்ப்பு அதிகரிக்கப்படுகிறது.

ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள்ளிருக்கும் 1000 முடி திருத்துவோருக்கு முடிதிருத்தும் கருவிகள் அடங்கிய கைப்பெட்டிகள், 6000 சலவைத் தொழிலாளருக்குப் பணிதேய்ப்புப் பெட்டிகள், 1000 பேர்களுக்கு, கல்லுடைக்கும் கருவிகள் வழங்கப்படும். இவ்வின மக்களுக்கு முடிதிருத்தகங்களும், சலவை நிலையங்களும், நடமாடும் சலவை நிலையங்களும் அரசால் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டங்களுக்காக 1997-98ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.85.84 இலட்சம் செலவிடப்படும்.

**கதர் கிராமத் தொழில்கள் வாரியம்**

நெசவாளர்கள் தறியுடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின் அடிப்படையில், நடப்பு ஆண்டில் மட்டும் 1000 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மத்திய, மாநில அரசு மானியமாக ரூ.190 இலட்சம் வழங்க உள்ளது.

நெசவாளர்களுக்குக் காசநோய் மருத்துவச் செலவிற்காக ரூ.1500ம், கண் பரிசோதனைக்கு ரூ.190ம், 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படும். 50 கைத்தறி நெசவாளர்கள் உள்ள பகுதிக்கு ஒரு ஆழ்துளைக் கிணறும், பெண் நெசவாளர் பேறுகால நிதியுதவியாக ரூ.500ம், நெசவாளர் கருத்தடை உதவித்தொகையாக ரூ.100ம் வழங்கப்பட்டு 150 நெசவாளர் குடும்பங்கள் உள்ள கிராமப் பகுதிக்கு ரூ.1 இலட்சம் செலவில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே முதல்முறையாக 60 வயதிற்கு மேற்பட்ட நெசவாளர்களுக்கு ரூ.150 ஒய்வூதியம் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் ஒப்புதல் கொடுத்துள்ளார்கள்.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1997-98ஆம் ஆண்டில் திட்டப் பகுதியிலுள்ள பழங்குடியினருக்குத் தைலம் வடிகட்டும் கருவிகள், தேனீப் பெட்டிகள் வழங்குதல் மற்றும்

பயிற்சியளிக்க ரூ.49.61 இலட்சம் செலவிடப்பட உள்ளது.

கோவை மாவட்டம் கலிக்கநாயக்கன்பாளையத்தில் கடந்த 17 ஆண்டு காலமாக மூடிக்கிடந்த பனஞ்சீனி ஆலை செப்பனிடப்பட்டு, விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் 500 பனைத் தொழிலாளர்களுக்குப் புதியதாக வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

மாதவரத்தில் 6 ஆண்டு காலமாக மூடிக்கிடந்த பனஞ்சீனி ஆலையினை இன்னும் 2 மாதத்தில் திறக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதன் மூலம் அப்பகுதியிலுள்ள 500 பனைத் தொழிலாளர்கள் புதிதாக வேலைவாய்ப்புப் பெறுவர். கடப்பாக்கத்தில் 1993 முதல் செயல்படாமல் மூடிக்கிடந்த பனஞ்சீனி ஆலையினை வரும் மே மாதத்தில் திறந்து உற்பத்தியைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 500 பேருக்குப் புதியதாக வேலைவாய்ப்பு அளிக்கப்படும். மாத்தூரில் உள்ள பனஞ்சீனி ஆலை சீரமைக்கப்பட்டு, தற்போது முழுவேகத்தில் உற்பத்தியினைச் செய்து வருகின்றது. இத்திட்டத்தில் 500 நபர்கள் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர்.

வாரியத்தின் கீழ் செயல்படும் 11 பனந்தும்பு பிரஷ் உற்பத்தி அலகுகளில் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி அதன் வாயிலாக 1000 பனைத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திட அரசு ஆவன செய்துள்ளது.

பதநீர் விற்பனையை அதிகப்படுத்தி இதன்மூலம் 1500 நபர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களுக்கு, அரசு இலவச வீடுகளைக் கட்டித்தரும் திட்டத்தினைப் போன்று, முதற்கட்டமாக ஒரு வீட்டிற்கான திட்டச்செலவு ரூ.30,000 வீதம் 500 வீடுகளுக்கு ரூ.1.50 கோடிக்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

1997-98ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டங்களின் மூலம், சுமார் 2,000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 5 திட்டங்களுக்கு ரூ.19.47 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் பதநீர் பக்குவப்படுத்தும் பிரிவு தொடங்குதல், தூரிகை தயாரிப்புப் பிரிவு தொடங்குதல், சர்க்கரை ஆலை பழுதுபார்க்கும்பணி, ஆகியவை அடங்கும்.

பல ஆண்டுகளாகக் கவனிக்கப்படாமலிருந்த தண்டையார்பேட்டை தொழிலாளர்களுக்கான 300 குடியிருப்பில் பழுது பார்த்து அடிப்படை வசதி ஏற்படுத்தித் தருவதற்கு ரூ.8.36 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தண்டையார்பேட்டை குடியிருப்பில் கழிவு நீர் வெளியேற்றுதல், மற்றும் தூய்மைப்படுத்தும் பணிகளுக்காக ரூ.2.3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



சேலம் அரசு அச்சகத் தொழிலாளர்கள் பணியாற்றுமிடத்தில் வெப்பத்தின் கடுமையைப் போக்க எக்சாஸ்ட் பேன்கள் பொருத்த ரூ.1.5 இலட்சமும், இயக்குநர் அலுவலகத்தில் பணியாளர்களுக்காக சைக்கிள் ஷெட்/உணவருந்தும் இடம் கட்ட ரூ.1.5 இலட்சமும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை**

நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களில் ஆண்களுக்கு வழங்கும் சீருடையுடன் சுகாதாரத்திற்காகத் தலையில் கட்டிக்கொண்டு பணிபுரிய வழங்கப்படும் துணி, பெண் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும்.

**ஊரகத்துறை மற்றும் பதிவுத்துறை**

கிராமப் பகுதிகளில் கிடைக்கப்பெறும் மூலப் பொருட்கள் அடிப்படையிலும், மற்ற தேவைகளின் அடிப்படையிலும், அப்பகுதிவாழ் மக்கள் வேலை வாய்ப்புப் பெறும் வகையிலும், இப்பகுதிகளிலும் ஊரகத் தொழில் வளர்ச்சியைப் பெருக்கும் நோக்கத்துடனும் குறைந்தது 5 ஏக்கர் அளவு நிலத்தில் சிறு தொழில் கூட்டுறவுப் பேட்டைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**போக்குவரத்துத் துறை**

போக்குவரத்துத் தொழிலாளர்களின் மீதுள்ள சிறிய குற்றங்களுக்கு மன்னிப்பு வழங்க, அனைத்துப் போக்குவரத்து நிர்வாக இயக்குநர்களுக்கும் கடிதம் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

போக்குவரத்துத் தொழிலாளரிடம் ரூபாய் 10 பிடித்துக்கொண்டு, குடும்ப நல நிதியை ரூ.1 இலட்சமாக உயர்த்த அரசு பரிசீலித்து வருகிறது.

**வருவாய்த் துறை**

நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்திற்காக நில அளவர்/வரைவாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், பிரிவு எழுத்தர் உள்ளிட்ட பல பதவிகளில் தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்ட பணியாளர்கள், இத்திட்டம் முடிவுறும் தருவாயில், அவர்களுக்குப் படிப்படியாகப் பல துறைகளில் பணி வழங்கப்பட்டது. தற்போது 1175 நபர்கள் தொகுப்பூதியப் பணியாளர்

களாகவே இருந்து வருகின்றனர். இவர்களது அதிகபட்சத் தொகுப்பூதியம் மாதம் ரூ.800 ஆகும். இவர்களது பொருளாதார நிலை, வயது மற்றும் நீண்ட கால அனுபவத்தைக் கருத்திற்கொண்டு அவர்களை முறையான சம்பள ஏற்ற முறைப் பணியிடங்களில் பணியமர்த்த அரசு கருதியுள்ளது. நில அளவை மற்றும் அனைத்துத் துறைகளிலும் அவர்களை நியமிப்பதற்காக மிகைப் பணியிடங்கள் தோற்றுவித்து, அப்பணி யிடங்களில், கல்வித் தகுதிக்கேற்ப எல்லாத் தொகுப்பூதியப் பணியாளர்களையும் நியமனம் செய்யலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பால்வளம்**

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சரின் ஆணையின்படி, தொழிற்சங்கத் தலைவர் மற்றும் தொழிலாளிகளின் வேண்டு கோளுக்கிணங்க 420 நபர்களுக்கு வேலை தரப்பட்டு, இதுவரை 300 நபர்கள் பணியில் சேர்ந்து பணியாற்றுகிறார்கள்.

**கல்வித்துறை**

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தனித்துறையாக இயங்கி வருகின்றது. இந்தத் துறைக்கு இயக்குநர் உண்டு. இங்குள்ள ஆசிரியர்கள் தொடர்ந்து 5 ஆண்டு 10 ஆண்டு காலம் இந்தத் துறையிலேயே இருந்து பணியாற்றும் நிலை இப்போது இல்லை. அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள், அதைவிட உயர்ந்த பதவி கிடைக்கும்போது மாறிச் சென்றுவிடுகின்றார்கள். அதனால், அரசு இப்போது அந்தத் துறையிலே பணியாற்றுகிற ஆசிரியர்களும் தனித்துறையாகவே இருக்கவேண்டுமென்று தீர்மானித்து அந்தத் துறைக்கு யார் யார் விருப்பம் தெரிவிக்கின்றார்களோ, அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அதிலே தகுதியுடையவர்களைத் தெரிந்து அவர்களைக் கொண்டு அந்தத் துறை தனித்துறையாக நடக்க வேண்டுமென்று தீர்மானித்து இருக்கிறது.

இப்போது Guest Lecturer, Hour Lecturer என்று பல கலை அறிவியல் கல்லூரிகளிலே, பொறியியல் கல்லூரிகளிலே நியமிக்கப்படுகிற முறை விரைவில் மாற்றப்பட்டு நிரந்தரமாகப் பணி செய்யக் கூடியவர்கள் நியமிக்கப்படுவார்கள் -அல்லது அவர்களுக்கு ஊதிய உயர்வு தரப்பட்டு, 50 ரூபாய்க்குப் பதிலாக 80 ரூபாயும், 60 ரூபாய்க்குப் பதிலாக 100 ரூபாயும் தரப்பட்டு அவர்களுடைய பணி மேலும் செம்மைப்படுத்தப்படும்.

ஏற்கெனவே வேலை நிறுத்தம் செய்த ஆசிரியர்களுக்கு அவர்கள் வேலை நிறுத்தம் செய்த அத்தனை நாட்களும் அவர்களுடைய விடுமுறை நாட்களாகக் கருதப்படும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. அதைமாற்றி, அவர்கள் வேலை செய்த நாட்களிலே 12 நாட்கள் பணியினால் ஈடுசெய்து விட்ட காரணத்தால், அந்த 12 நாட்களை ஈடுசெய்த நாட்களாக ஏற்றுக்கொண்டு மிச்சம் இருக்கின்ற 7 நாட்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய விடுப்புக் கணக்கில் சேர்த்துக்கொள்ளலாம் என்று அரசு தீர்மானித்து அறிவித்துள்ளது.




இளநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் என்று இரு பிரிவு இருந்தது. சுமார் 10,000 இளநிலை ஆசிரியர்கள் தங்களை இடைநிலை ஆசிரியர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தனர். 1971ஆம் ஆண்டு தமிழக முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள், அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, உடனடியாக இடைநிலை ஆசிரியர்களாக மாற்றி ஏற்றுக் கொள்ளலாம் என்று அறிவித்தார்கள். அந்தக் காலக்கட்டத்தில் 5,500

நபர்கள் அப்படி இடைநிலை ஆசிரியர் பணித்தகுதி பெற்றார்கள். விட்டுப்போன 6000 நபர்களுக்கு இப்போது இடைநிலை ஆசிரியர் என்ற தகுதி 1973 முதல், அவர்கள் அந்தப் பணியிலே இருந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஊதிய உயர்வு வழங்கப் படுகிறது. இதனை நடைமுறைபடுத்தப் படுகிறபோது ரூ.3.5 கோடி அரசுக்குச் செலவு ஏற்படும்.

தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் சீருந்து, ஈருருளி இவைகளை வாங்குவதற்கு, அரசு ஆசிரியர்களைப் போலவே, முன்பணம் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

நூலகத்துறையில் உள்ள மூன்றாம் நிலை நூல கருக்கான பணித் தகுதிகள் முடிவு செய்யப்பட்டு, காலியாக உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட பதவிகள் நிரப்பப்பட உள்ளன.

பள்ளியில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சீருடைப்படி 150 ரூபாய் என்பது போன்று, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி இயக்குநர்களுக்கும் ரூ.150 சீருடைப்படியாக வழங்கப்பட்டது.

**பொதுப்பணித்துறை**

பொதுப்பணித்துறையில், குறிப்பாகப் பாசனப் பிரிவு ஊழியராக இருப்பவர்கள் பாசன உதவியாளர்கள். இவர்களை 'லஸ்கர்' என்றால்தான் யாவருக்கும் புரியும். இந்தத் துறையில் இவர்களின் எண்ணிக்கை 2,502. இதில் 1,424 இடங்கள் பல ஆண்டுகாலமாக நிரப்பப்படாமல் உள்ளது. பொதுப்பணித்துறையில் 3031 மஸ்தூர்கள் உள்ளனர். இந்த மஸ்தூர்களிலிருந்து 1424 நபர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து, பாசன உதவியாளர்களாக அமர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதித்துள்ளார்கள்.

10 ஆண்டுக்கு மேல் தினக்கூலியாகப் பணியாற்றிவந்த 715 நபர்களை நிரந்தரப் பணியாளர்களாக அறிவித்து ஆணையிடப்படும்.

**உணவுத்துறை**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மூலம், நிலங்களுக்கு மட்டும்தான், விவசாயிக்கு மட்டும்தான் என்றில்லாமல், விவசாயிகள் புதிய இல்லங்களைக் கட்டிக் கொள்வதற்காக, வீட்டு மனை வாங்க ரூ.20,000 கடனும், இருக்கின்ற வீடுகளைப் பழுதுபார்க்க ரூ.50,000 கடனும், புதிதாக வீடுகட்டிக் கொள்ள ரூ.1 இலட்சம் வரை கடனும் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் இருக்கும் கிட்டத்தட்ட அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டன. மிச்ச மிருக்கும் ஓரிரு வங்கிகளின் ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கப்படும்.

---

**எச்சரிக்கை**

*மரங்களை வெட்டினான்*
*மனிதன்!*
சொன்னது பூமி
'நீ வெட்டுவது
உன்
சுவாசப் பைகளை'!

**சுதந்திர கீதம்**

*கிளி ஜோசியக்காரனிடம்*
கேட்டேன்
*'கிடைக்குமோ விடுதலை*
*உன்*
*கிளிக்கு?'*

- பேரா. க. இராமசந்திரன்

---

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **வெ. இறையன்பு,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927

விடிந்துவிடு இரவே
விழித்திருக்கிறான்
கூர்க்கா

\- அறிவுமதி



ப்ருகல் வரைந்த ஓவியம்


நல்வாழ்த்துகள்

**குப்பண்ணா புளூ மெட்டல்ஸ்**

குருக்கத்தி.

&

**ஸ்ரீ கிருஷ்ணா பீட்ஸ்**

காங்கேயம்.



நடவுநடும் பெண்கள்
எல்லாம் சேறு
அவர்கள் பாடல்களைத் தவிர

- ஜப்பான் ஹைகூ


நல்வாழ்த்துகள்

**பெரியார் மாவட்ட தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம்**

காங்கயம்.

&

**காங்கயம் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம்**

காங்கயம்.

&

**வெள்ளக்கோயில் வட்டார தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம்**

வெள்ளக்கோயில்.




தூய
பட்டு

தூய
சரிகை





ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA 7556 95

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

# தொழிலாளர் நலம்பெற அரசின் அறிவிப்புகளில் சில...

- நெசவாளர்களுக்குக் காப்பீட்டுத் தொகை ரூ.25,000/- ஆக உயர்வு.
- நடப்பாண்டில் மீனவர்களுக்கு 4000 வீடுகள்.
- 6100 மீனவர்கள் பயனடைய ரூ.11 கோடி செலவில் இயந்திரங்கள்.
- மூடப்பட்டிருக்கும் 34 ஆலைகள் திறக்க முயற்சி.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் 11,000 ஏக்கர் நிலப்பரப்பில் அரசு ரப்பர் கழகம். 2,244 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.
- நடப்பாண்டில் 14 மாவட்டங்களில் ரூ.2.40 கோடி செலவில் மூன்று இலட்சம் மகளிர் பயன்பெற திட்டம்.
- தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் நலச்சட்டம் மாநிலம் முழுமைக்கும் விரிவு.
- பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் பணியில் இறந்தால் வாரிசுதாரர்க்கு உதவித் தொகை ரூ.50 ஆயிரம்.